லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு - 7 இதழ்-3 ஆகஸ்டு 2018 மாத இதழ் விலை ₹10/-

makkalvisaranai



# சரிந்தது திராவிடம்


வள்ளலார் அருளிய
கல்ப மருந்து
பத்தியமில்லா மருந்து
குணமாகும் நோய்கள்
■ புற்று நோய்கள்
■ இருதய அடைப்புகள்
■ உள் உறுப்புகளில்
ஏற்பட்டுள்ள அனைத்து வகையான கட்டிகள்
■ சிறுநீரக கற்கள்
■ சிறுநீரகக் கோளாறுகள்
■ கல்லடைப்பு
■ சதையடைப்பு
■ சிறுநீர் பிரச்சனை
■ இரத்த ஓட்டம் சீராகும்
■ சளி ■ இருமல் ■ கப ரோகங்கள்
■ கபம் ■ காசம் ■ சைனஸ்
■ கண்பார்வை கோளாறுகள்
■ வாதம் ■ பித்தம்
போன்ற அனைத்து விதமான நோய்களும் தீரும்
நோய்கள் சம்பந்தமாக சித்தமருத்துவரை அணுகி
ஆலோசனை பெற தொடர்பு கொள்ளவும்
சித்த மருத்துவர் K. இராஜமாணிக்கம்
அகத்தியர் மூலிகை மருத்துவ மையம்
எண்.10, கலைஞர் கருணாநிதி சாலை, சாலிகிராமம், சென்னை-600 093.
எண்.29, பிள்ளையார் கோவில் தெரு, மூன்லைட், இராமாபுரம், சென்னை-89
செல் : 99417 64922, 94441 80984

# தலையங்கம்

அன்பாய் அனைவரும்
ஒன்றிடுவோம்.
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்.
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்.
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்.
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்.
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்.

# லஞ்சம், ஊழல் என்பது வெறும் வார்த்தையில் மட்டும் தானா?

லஞ்சம் வாங்குவது குற்றம் என்பதைப் போல கொடுப்பதும் குற்றம் என்பதால், கொடுப்பவர்களையும் தண்டிக்க வேண்டும் என்பது ஐக்கிய நாடுகள் சபை ஆதரவில் நடந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவு. ஆனால், லஞ்சம் கொடுக்க ஒருவர் நிர்ப்பந்திக்கப்பட்டால், கொடுத்தவரைத் தண்டிக்கத் தேவையில்லை என்று அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த விதிவிலக்கு கடும் விவாதங்களை எழுப்பியிருக்கிறது. காவல் துறையோ, வேறு அதிகாரியோ லஞ்சம் கேட்டது தொடர்பாக மக்கள் அளிக்கும் புகார்களைப் பதிவுசெய்ய மறுத்துவிட்டால் என்ன செய்வது? அதுமட்டுமல்ல, நான் கேட்டபடி லஞ்சம் தராததுடன் மேல் அதிகாரியிடம் போய் புகார் செய்தாயா என்றும் சில ஊழல் அரசு அலுவலர்கள் மிரட்டக்கூடும்.

ஊழல் ஒழிப்புச் சட்டத்தில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிறார். புதிய திருத்தமானது குற்றம்செய்யும் நோக்கத்துடனான தவறான செயல் எது என்பதைச் சுருக்கமாகவும், வரையறுத்தும் கூறுவதால் வரவேற்புக்குரியது. என்றாலும், இந்த சட்டத்திருத்தம் ஊழலை ஒழிக்கும் நடைமுறைகளில் உள்ள சிக்கல்களைக் களையவில்லை என்பதால், கடும் விமர்சனங்களையும் எதிர்கொண்டிருக்கிறது.

பொதுப் பயன்பாட்டுக்கான ஒன்றைச் சொந்தப் பயன்பாட்டுக்கு மட்டும் சுயாதீனப்படுத்துவதோ, வருவாய்க்குப் பொருத்தமில்லாமல் சொத்துகளைச் சேர்ப்பதோ குற்றம் என்று சட்டத்திருத்தத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. பதவிவகித்த காலத்தில், தான் சேர்த்த சொத்து, எந்தெந்த வருமானங்கள் மூலம் வாங்கப்பட்டது என்று ஒருவரால் நிரூபிக்க முடியவில்லை என்றால், அதை ‘உள்நோக்கத்துடன் சொத்து சேர்த்ததாக அனுமானித்துக்கொள்ளலாம்’ என்று திருத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் திருத்தத்திலேயே ஏற்க முடியாத மற்றொன்று, உரிய மேலதிகாரியின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் ஊழல் புகார் மீதான விசாரணையைத் தொடங்க வேண்டும் என்பது. வழக்கு நடத்த மேலதிகாரியின் அனுமதி தேவை என்று ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது விசாரணைக்கும் மேலதிகாரியின் ஒப்புதல் தேவை என்பது ஏற்க முடியாததாக இருக்கிறது. வீணான லஞ்சப் புகார்களால் அரசு அதிகாரிகள் அலைக்கழிக்கப்படக் கூடாது என்பதை ஏற்கும் அதே வேளையில், ஊழலுக்கு எதிரான சட்ட நடைமுறையில் இத்தனை நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிப்பது சரியல்ல.

லஞ்சம் கேட்டார்கள் என்று புகார் தருவோருக்கு உரிய பாதுகாப்பை அளிக்காமல், ஊழலை ஒழிப்பதாகச் சொல்வது வெறும் பெயரளவுக்கானதாகவே இருக்கும். லஞ்சம் கேட்பவர்களும் வாங்குகிறவர்களும் சட்டப்படி உடனுக்குடன் தண்டிக்கப்பட வேண்டும். லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிக்க லோக்பால் அல்லது லோக்ஆயுக்தாக்கள் நியமிக்கப்பட வேண்டும். இந்த விசாரணைகள் உரிய காலவரம்புக்குள் விசாரிக்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படுவதும் முக்கியம். அப்போதுதான் ஊழல் ஒழிப்புச் சட்டத்தின் நோக்கம் நிறைவேறும்.

– ஆசிரியர்



# சரிந்தது திராவிடம்

`கலைஞர் மு.கருணாநிதி' என்று அழைக்கப்படும் இவர், தமிழக அரசியல் தலைவர். 1969 முதல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக இருக்கிறார். 13 முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்வானவர். போட்டியிட்ட அனைத்துத் தேர்தலிலும் வெற்றி பெற்ற பெருமை இவருக்கு உண்டு. நாகப்பட்டினம் மாவட்டத்தில் `திருக்கோளிலி' என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட திருக்குவளை என்ற கிராமத்தில் இசை சார்ந்த எளிய குடும்பத்தில் 1924, ஜூன் 3ம் தேதி பிறந்தார். பெற்றோர் முத்துவேலர் நாட்டு வைத்தியர். அம்மா பெயர்அஞ்சுகம். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் தட்சிணாமூர்த்தி. உடன் பிறந்தவர்கள் பெரியநாயகம், சண்முகசுந்தரம் என இரண்டு சகோதரிகள்.

திருக்குவளை தொடக்கப்பள்ளியிலும், திருவாரூர் போர்டு உயர்நிலைப்பள்ளியிலும் படித்தார். பள்ளிப்பருவத்திலேயே நாடகம், கவிதை, பேச்சில் தீவிர ஈடுபாடு கொண்டவராக இருந்தார். விளையாட்டிலும் தீவிர ஆர்வம் இருந்தது. திருவாரூர் போர்டு உயர்நிலைப்பள்ளி ஹாக்கி டீமில் இருந்திருக்கிறார்.

1937ல் ஆட்சியில் இருந்த ராஜாஜி அரசு, அரசுப்பள்ளிகளில் இந்திப் படிப்பைக் கட்டாயமாக்கியது. அதைக்கண்டித்து, அப்போதைய பிரதான எதிர்க்கட்சியாக இருந்த நீதிக்கட்சி தொடர் போராட்டங்களை முன்னெடுத்தது. 12 வயதிலேயே கருணாநிதி இந்தப் போராட்டங்களால் ஈர்க்கப்பட்டார். ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் நீதிக்கட்சியின் தலைவராக இருந்து செயல்பட்ட பட்டுக்கோட்டை அழகிரியின் பேச்சு கருணாநிதியை பெரிதும் கவர்ந்தது. தன் பள்ளி நண்பர்களை ஒருங்கிணைத்து, `இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பு' என்ற இயக்கத்தைத் தொடங்கினார். இந்தி எதிர்ப்புப் பேரணிகளையும் நடத்தினார். போராட்டத்திற்கு மாணவர்களைத் திரட்ட அந்த சிறு வயதிலேயே `மாணவ நேசன்' என்ற கையெழுத்துப் பத்திரிகையை நடத்தினார். 17 வயதில் தமிழ்நாடு மாணவர் மன்றத்தின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

1942ல் அறிஞர் அண்ணா நடத்திய திராவிட நாடு பத்திரிகையில் கருணாநிதி எழுதிய `இளமைப்பலி' என்ற படைப்பு வெளியானது. அப்படைப்பு அண்ணாவை பெரிதும் கவர, திருவாரூரில் ஒரு விழாவுக்காக வந்திருந்த அவர் கருணாநிதியை அழைத்துப் பாராட்டினார். அதன்பிறகு இன்னும் தீவிரமாக செயல்படத் தொடங்கினார் கருணாநிதி. துண்டு பிரசுரங்கள், வெளியீடுகள் மூலம் பிரசாரம் செய்து வந்த கருணாநிதி, தன் பிரசாரத்துக்கென ஒரு அச்சிதழ் தொடங்கும் தேவையை உணர்ந்து 1942, ஆகஸ்ட் மாதம் `முரசொலி' பத்திரிகையை தொடங்கினார். தொடக்கத்தில் வார இதழாக வெளிவந்த இந்த பத்திரிகை, 1960 செப்டம்பர் முதல் நாளேடாக மாற்றப்பட்டது. `சேரன்', `மறவன் குரல்' போன்ற பெயர்களில் தொடக்கத்தில் அனல் தெரிக்கும் கட்டுரைகளை எழுதினார் கருணாநிதி. பிற்காலத்தில் இது, உடன்பிறப்புகளுக்கான கடிதமாக மாறியது. அக்கடிதம் திமுக தொண்டர்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்றது.

1957ல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் குளித்தலை தொகுதியிலும், 1962ல் தஞ் சாவூர் தொகுதியிலும், 1967, 1971தேர்தல்களில் சைதாப்பேட்டை தொகுதியிலும், 1977, 1980 தேர்தல்களில் அண்ணா நகர் தொகுதியிலும், 1989, 1991 தேர்தல்களில் துறைமுகம் தொகுதியிலும் 1996, 2001, 2006 தேர்தல்களில் சேப்பாக்கம் தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார் கருணாநிதி. 2011, 2016 சட்டமன்றத் தேர்தல்களில் திருவாரூர் தொகுதியிலும் போட்டியிட்டு ஜெயித்தார். 2016 தேர்தலில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த வேட்பாளர் பன்னீர்செல்வத்தை 68,366

வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். இது மாநிலத்திலேயே அதிக வாக்கு வித்தியாசமாகும்.

1967ல் நடைபெற்ற மூன்றாவது தமிழக சட்டமன்றப் பொதுத்தேர்தலில் தி.மு.க. 138 இடங்களைப் பிடித்து முதல்முறையாக ஆட்சியைப் பிடித்தது அக்கட்சிப் பொதுச்செயலர் அண்ணா தமிழ்நாட்டின் முதல்வரானார். அண்ணாவின் அமைச்சரவையில் போக்குவரத்து மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சராக பொறுப்பேற்றார் கருணாநிதி. அதுவரை தனியார் வசம் இருந்த பேருந்துகள் இக்காலக்கட்டத்தில் தான் நாட்டுடைமையாக்கப்பட்டன. இந்தியாவில் முதன்முறையாக பேருந்துகள் நாட்டுடைமையாக்கப்பட்டது தமிழகத்தில்தான்.

1969 பிப்ரவரி 3ம் தேதி அண்ணா மறைந்தார். அண்ணாவின் மறைவையடுத்து, அடுத்த முதல்வர் யார் என்பதில் கருணாநிதிக்கும் கல்வியமைச்சராக இருந்த நெடுஞ்செழியனுக்கும் இடையே கடும் போட்டி ஏற்பட்டது. தந்தை பெரியார் தலையிட்டு சமரசம் ஏற்படுத்தி கருணாநிதியை முதல்வராக பொறுப்பேற்க செய்தார். அதே ஆண்டில் கருணாநிதி திராவிட முன்னேற்றக் கழகத்தின். தலைவராகவும், இரா. நெடுஞ்செழியன் பொதுச்செயலராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

சுதந்திர தினத்தன்று கோட்டையில் தேசியக் கொடியை மாநில ஆளுநர் ஏற்றி வைக்கும் வழக்கத்தை மாற்றி மாநில முதல்வர்களுக்கு அவ்வுரிமையை பெற்றுத் தந்தார். தனியார் பேருந்துகளை நாட்டுடமை ஆக்கி, சேரன், சோழன், பாண்டியன், பல்லவன்,திருவள்ளுவர் பெயர்களில் போக்குவரத்துக் கழகங்களை உருவாக்கினார். குடிசை மாற்று வாரியத்தை உருவாக்கி ஏழை மக்களும் மாடி வீடுகளில் வசிக்கும் வாய்ப்பை உருவாக்கினார். மாணவர்களுக்கு இலவச பஸ்பாஸ் வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். மனிதனை வைத்து மனிதன் இழுக்கும் கை ரிக்ஷாவை ஒழித்து, இலவசமாக சைக்கிள் ரிக்ஷா வழங்கினார். தமிழறிஞர்களின் பிள்ளைகளுக்கு பொறியியல், மருத்துவப் படிப்புகளில் 5% தனி இட ஒதுக்கீடு வழங்கினார். விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டத்தைக் கொண்டு வந்தார். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம் கொண்டு வந்தார். மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்காக 20% இட ஒதுக்கீடு அளித்தார். கிழக்கு ஆசியாவிலேயே முதன்முதலாகக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஏற்படுத்தினார்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படுவது போல் மொழிப்போர் தியாகிகளுக்கும் ஒய்வூதியம் வழங்கினார். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் உட்பட்ட ஒரு சிற்றூரைத் தேர்ந்தெடுத்து, அதில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்தினார். அரசுபொதுமக்கள் பங்களிப்போடு செயல்படுத்தப்படும் நமக்கு நாமே திட்டத்தைக் கொண்டு வந்தார். நாடெங்கும் சமத்துவபுரங்களைத் திறந்து அவற்றிற்குப் `பெரியார் நினைவு சமத்துவபுரம்' எனப் பெயிரிட்டார். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலத்திற்காக தனி அமைச்சகம் ஏற்படுத்தினார்.



90 வயதுகளைக் கடந்தபிறகும், சிறிதும் உற்சாகம் குறையாமல் தன் அன்றாட அலுவல்களில் தீவிரமாக இருந்தார் கருணாநிதி. அரசியல் சார்ந்த கூட்டங்கள், முடிவுகள், பிரசாரம் என அவரது உழைப்பு இளம் தலைமுறைக்கு பாடமாக அமைந்தது. சாதாரண குடும்பத்தில் பிறந்தாலும், கடினமாக உழைத்தால், மிக உயரிய பதவியை எட்டி பிடிக்க முடியும் என்பதை நிரூபித்தவர், கருணாநிதி.

07.08.2018 அன்று திராவிட இயக்கத் தலைவர்களில் முதுபெரும் தலைவரும், தமிழகத்தின் தன்னிகரில்லாத அரசியல் தலைவரும், தமிழகத்தின் முதல்வராக 6 முறை பதவி வகித்தவருமான முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதியின் உயிர் பிரிந்ததாக மருத்துவமனை நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.



முனைவர் ஆ.மவுரியன்



# அஞ்சலையம்மாள்

வீரத்தமிழச்சிகளின் வரலாறு...! 10

## தமிழ்நாட்டில் முதன் முதலில் சத்தியாகிரகத்தில் சிறை புகுந்த பெண்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு தியாகங்கள் பல புரிந்த வீரர்கள் பற்றிய எல்லா விவரங்களும் கிடைப்பது என்பது அரிதுதான். எத்தனையோ தியாகிகளின் வரலாறு கால ஓட்டத்தில் காற்றோடு காற்றாகக் கலந்து வெளியில் தெரியாமலே பொய்விட்டது. வேறு சிலரது வரலாறோ பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அவை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படாத காரணத்தாலேயே மறக்கப்பட்டும் விட்டது. ஒரு நாட்டின் தியாக வரலாறு முறைப்படி அரசாங்கத்தின் முத்திரையோடு பதிவு செய்யப்பட வேண்டும். அப்படி பதிவு செய்யப்பட்ட தியாகிகளை மக்கள் ஆண்டுதோறும் நினைவுகூர வேண்டும். குறைந்த பட்சம் சுதந்திர நாள், குடியரசு நாள் போன்ற தேசிய நாட்களிலாவது அவர்களது நினைவுக்கு மக்கள் அஞ்சலி செலுத்த வேண்டும். அப்படி வரலாற்றின் ஏடுகளில் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும், பெருமளவு மக்கள் மத்தியில் பிரபலமாகாத சில பெயர்களில் கடலூர் அஞ்சலை அம்மாளும் ஒருவர். இவரது கணவரும் ஒரு தியாகி. இவரது மகளும், மருமகனும்கூட தியாகிகள். இப்படி குடும்பமே தியாகிகள் குடும்பமாக இருக்கும் ஒருசிலரில் அஞ்சலை அம்மாள் குடும்பமும் ஒன்று.

கடலூர் முது நகரில் சுண்ணாம்புக்காரத் தெருவிலுள்ள 38ஆம் எண் இல்லத்தில் 1890 ஆம் ஆண்டு பிறந்த அஞ்சலையம்மாள் திண்ணைப் பள்ளியில் 5 ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். பெண்ணடிமைத்தனம் முற்றிலும் ஒழிந்து போகாத காலகட்டத்தில் ஓர் எளிய குடும்பத்தில் பிறந்த பெணமணி தன்னை விடுதலைப்போரில் ஈடுபடுத்திக்கொண்டு பல முறை சிறை சென்றதென்பது வரலாற்றுச் சாதனையாகும்.

“விடுதலைக்கு மகளிரெல்லாம் வேட்கை கொண்டனம்” என்று பாரதி, பெண் விடுதலைக்கு அறைகூவல் விட்ட காலகட்டத்தில் பெண் விடுதலையை விட தாய்நாட்டின் விடுதலை முக்கியம் என்று களத்தில் குதித்தவர் தென்னார்க்காடு மாவட்டத்தின் தெய்வத்தாய் என்றும் வேலு நாச்சியார் என்றும் போற்றப்படும் திருமதி.அஞ்சலை அம்மாள் அவர்கள். 1921ல் இந்திய சுதந்திரப் போர் அரங்கில் இறங்குகிறார். சாதாரண நெசவு குடும்பத்தில் பிறந்தவர். குறைந்த படிப்பறிவு இருந்தாலும் அறிவும் துணிவும் அனுபவமும் எப்படி வந்திருக்கும்? இவை இந்த சமூகம் பாய்ச்சிய வீர ரத்தத்தின் வெளிப்பாடு அல்லவா!

”விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை வீரப்பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்” என்று பாரதி முழங்கிய கனவை நனவாக்கியவர் அல்லவா இவர். சமகால பெண்ணிய எழுத்தாளர் அம்பை மிகவும் ஆதங்கத்துடன் ஒரு கதையில் சொல்வார் இந்தப் பெண்கள் அறிவையும், திறமையையும், சமையலறையிலே முடக்கி வைத்துக் கொள்கிறார்களே தோராயமாக ஒரு பெண்ணின் ஆயுள் காலத்தில் 2,92,000 தோசை சுடுபவளாக இருக்கிறாளே! ஆனால், சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலேயே மரபு என்னும் விலங்கை உடைத்தெறிந்துவிட்டு வாழ்வு என்பது குடும்ப வாழ்வு மட்டுமல்ல, சமுதாய வாழ்வும்தான் என்று முழங்கி குடும்பத்தினருடான் வீதியில் இறங்கியவர் அஞ்சலை அம்மாள்.

ஆம், இவர் நேருவின் குடும்பம் போல என்று சிலர் சிலாகித்து எழுதுகின்றனர். பேசுகின்றனர். ஆனால், இவர்கள் இன்னும் ஒருபடி மேல் என்று நம்மால் அடித்துச் சொல்ல முடியும். நேருவுக்கு பொருளாதார பலம் இருந்தது. குடும்பமும் சிறிய குடும்பம்தான்.

ஆனால், இவர் குடும்பமோ பெரிய குடும்பம். பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய குடும்பம். அன்றைய உழைப்புதான் அன்றைய சாப்பாடு என்றிருக்கும் போது எந்த துணிவில் அவர் சுதந்திர போரில் இறங்கியிருப்பார்? அதுவும் அந்த காலத்தைச் சேர்ந்த பெண்! பெண்களை நான்கு சுவர்களுக்குள்ளேயே வைத்து வெட்டி வீரம் பேசும் சமூகம்! ஆய்வுக்குரிய சிந்தனையாக எடுத்துக் கொள்ளவும். அமெரிக்க பெண்கள் விடுதலை போராட்ட வீராங்கனை பெட்டி ஃப்ரைடன் நீண்ட நாள் போராட்ட அனுபவத்திலிருந்து சொல்வது "ஆண்கள் ஒரு தனி வர்க்கமல்ல. பெண்கள் ஒரு தனிவர்க்கமல்ல. பெண்கள் மட்டும் தனியாக முன்னேறலாம் என்று நினைப்பது தவறு". தான் மட்டுமல்லாமல், கணவருடன், குழந்தைகளுடன் போராட்டத்தில் இறங்குகிறார்.



கணவர் முருகப் படையாச்சி, பெண் லீலாவதி, மகன்கள் காந்தி, ஜெயில்வீரன் (தற்போது ஜெயவீரன்) கர்ப்பிணியாக சிறைபுகுந்து பேறுகாலத்தில் அனுமதியுடன் வெளியே வந்து ஆண் மகவுடன் மறுபடியும் சிறை புகுகிறார், சிறை அதிகாரிகள், ஜெயில் வீரன் என்று குழந்தைக்கு பெயரிட்டு இப்போது ஜெயவீரனாக கடலூரில் வசிக்கிறார். "நாங்கள் இந்தியப் பெண்மணிகள் நாங்கள் மலரினும் மென்மையானவர். நாங்கள் சுட்டெரிக்கும் தீச்சுடர்கள்" என்ற ஒரு பெண் கவிஞரின் பாடல்வரிகள்தான் நினைவுக்கு வருகிறது. இந்திய விடுதலைக்காக தீவிரவாதியாக மாறிய மாடம் காமா, நீண்ட நாட்கள் தலைமறைவாக இருந்து போராடிய அருணா ஆசிப் அலிக்கும் சற்றும் குறைந்தவரல்லர் அஞ்சலை அம்மாள்.

- **1921** - சுதந்திர போராட்டத்தில் இறங்குகிறார்.
- **1927** - நீலன் சிலை அகற்றும் போரில் ஒரு வருடம் சிறை தண்டனை சென்னையில்
- **1931** - உப்புக்காய்ச்சல் போராட்டத்தில் ஆறுமாத சிறை தண்டனை கடலூரில்
- **1933** - மறியல் போரில் மூன்று மாத சிறை கடலூரில்
- **1940** - தனி நபர் சத்தியாகிரகத்தில் முதலில் 6 மாதம்
- **1940** - 18 மாதங்கள் வேலூர்
- **1943** - 8 மாதம் 2 வாரம் பெல்லாரி

ஆக, நான்கு வருடம் ஐந்தரை மாதம் சிறைவாசம். தமிழ்நாட்டில் முதன் முதலில் சத்தியாகிரகத்தில் சிறை புகுந்த பெண்கள் என்ற பெருமைக்குரியவர்கள் : 1. அஞ்சலை அம்மாள், 2. மதுரை பத்மாசனி அம்மாள். கள்ளுக்கடை இருக்குமிடமெல்லாம் அச்சிட்ட (குடியை கைவிடத் தூண்டும்) நோட்டீஸ்களை வழங்கிக் கொண்டே அஞ்சலை அம்மாள் மறியல் செய்வார். சென்னையில் தடைவிதிக்கப்பட்ட காங்கிரஸ் மகாநாட்டுக்கு தலைமை தாங்கி ஒரு பெண்கள் படையுடன் அஞ்சலையம்மாள் கைதானார். பிறகு ஜில்லாபோர்டு உறுப்பினராகவும், சென்னை சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து **20-06-1961** இல் அமரரானார்.

இவருடைய மகள் அம்மாப்பொண்ணு என்கிற லீலாவதி (காந்தி இட்ட பெயர்)

**தன்னுடைய 9வது வயதில் நீலன் என்ற கொடுங்கோலன் சிலையை அகற்றுவதற்காக தாயுடன் சென்னை வந்து போராட்டத்தில் ஈடுபட்டார். இவர்களுடன் தந்தையும் போராடும் போது அனைவரும் கைது செய்யப்பட்டு லீலாவதி சென்னி சிறுமியர் இல்லத்தில் நான்கு ஆண்டுகள் தங்கியிருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிடுகிறார். 1931ல் விடுதலையான பிறகு காந்தியின் வார்தா ஆசிரமத்தில் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்து சேவையில் ஈடுபட்டார்.**

தொடரும்...

# ஏரி, கால்வாய்களில் கழிவுநீர்?

## கண்டு கொள்ளுமா அரசு?



வேலூர் மாவட்டம் இராணிப்பேட்டை சிப்காட் பகுதியில் உள்ள புளியந்தாங்கல் கிராமத்தை சுற்றிலும் உள்ள தோல் தொழிற்சாலைகளால் ஏற்படும் கழிவுநீர் வேளியேற்றத்தால் புளியந்தாங்கல் கிராமப்பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள ஏரி மற்றும் கால்வாய்களில் இக்கழிவுநீர் கலப்பதால் அங்குள்ள பொதுமக்களுக்கும் மற்றும் கால்நடைகளுக்கும் பெறும் பாதிப்பு ஏற்படுகின்றன.

சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள தோல் தொழிற்சாலை கம்பெனிகளில் இருந்து இரவு நேரங்களில் வேளியேற்றப்படும் கழிவுநீரால் அங்குள்ள பகுதிகளில் சாலைகளிலும் ஏரிகளிலும் இக்கழிவுநீர் கலக்கப்படுவதால் ஏரிகளில் உள்ள புற்கள் கருகுவதால் அதனை உண்ணும் கால்நடைகளான ஆடுகள், மாடுகள் பாதிப்புக்குள்ளாகின்றன. அதுமட்டுமல்லாது சாலைகளில் செல்லும் பொதுமக்கள் கழிவுநீரால் வீசப்படும் துற்நாற்றத்தால் அப்பகுதி பொதுமக்களுக்கு சுவாசப்பிரச்சனைகளும் ஏற்படுகின்றன.

மேலும் அப்பகுதியில் சுற்றியுள்ள குடிநீர் குழாய்களில் இக்கழிவுநீர் சில சமயங்களில் கலப்பதால் அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் சரிவர கிடைப்பதில்லை. வேறுவழியின்றி அதே நீரை குடிப்பதால் தொற்றுநோய் பரவும் அபாயமும் உள்ளது.

மேலும் அங்குள்ள கம்பெனிகளில் இருந்து கழிவுநீர் வெளியேற்ற பூமிக்கு அடியில் குழாய்கள் பொறுத்தப்பட்டு அதன்மூலம் வேளியேற்றுகின்றனர். சில சமயங்களில் அந்த குழாய்கள் உடைந்து தரைமேல் சாலைகளில் கழிவுநீர் வேளியேறுகின்றன.



இதனை பற்றி புளியந்தாங்கல் பகுதி பொதுமக்கள் பலமுறை அரசாங்கத்திடம் முறையிட்டும் சாலை மறியல் போராட்டங்களில் ஈடுபட்டும் மற்றும் பத்திரிகை ஊடகங்கள் மூலமாக முறையிட்டும் ஏவ்வித பலனுமில்லை என்று முறையிடுகின்றனர்.

கம்பெனி முதலாளிகளும் அப்பகுதி ஊர் தலைவர்களும் இதனை கண்டு கொள்ளாமல் அவர்களின் கோரிக்கைகளை அலட்சியப்படுத்துகின்றனர்.

இக்கழிவுநீரை கட்டுபடுத்த அரசாங்கத்தால் நிறுவப்பட்ட (Panel Board Office) கழிவுநீர் தொட்டி அதனின் கொள்ளலவு மிகக்குறைவாக உள்ளதால் வெளியேற்றப்படும் கழிவுநீர் அக்கிணற்றில் நிரம்பி வெளியே வழிந்து ஓடுகின்றன. அதனால் கழிவுநீர் கால்வாய்களிலும் ஏரிகளிலும் கலந்துவிடுகின்றது. இந்த Panel Board Office பராமரிக்க ஆட்கள் இல்லை.

அதுமட்டுமின்றி ஆங்காங்கே சாலைகளில் விரிசலும் பள்ளங்களும் ஏற்பட்டு பொதுமக்களும் பள்ளி மாணவர்களும் நடந்துசெல்ல இடையூராக உள்ளன.

புளியந்தாங்கல் பொதுமக்களின் இக்கோரிக்கையை ஏற்று தகுந்த நடவடிக்கை அரசாங்கமோ அல்லது கம்பெனி நிர்வாகமோ மேற்கொள்ளுமா என்ற அச்சத்துடன் அப்பகுதி பொதுமக்கள் தினசரி வாழ்கையை நடத்துகின்றனர்.

– D.ராஜேஷ்

விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி முதல்வராக பொறுப்பேற்றிருக்கிறார் க.வேலு. இவர் முற்றிலும் பார்வை இல்லாத மாற்றுத் திறனாளி. எம்எஸ்சி, எம்ஃபில், பிஎச்டி முடித்தவர். விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூரை அடுத்த பொன்னியேந்தல் கிராமத்தைச் சேர்ந்தவர் வேலு. இவருக்கு 2 வயது இருக்கும்போது, டைபாய்டு காய்ச்சலில் பார்வை பறிபோனது. பார்வையை இழந்தாலும் படிப்பை இழக்க விரும்பாத வேலுவின் கல்விப் பயணம், கடலூரில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொடக்கப் பள்ளியில் தொடங்கியது.



# கல்லூரி முதல்வரான பார்வையற்றவர்

பின்னர் மேல்நிலைக் கல்வியை சென்னை பூந்தமல்லி பள்ளியில் முடித்தார். இதைத் தொடர்ந்து சென்னை பிரசிடென்ஸி கல்லூரியில் பிஏ தமிழ் பட்டப் படிப்பையும், முதுநிலை படிப்பையும் முடித்து அங்கேயே இணை பேராசிரியராக பணியாற்றத் தொடங்கினார். தொடர்ந்து விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரிகளில் பணியாற்றியவர், தற்போது விருத்தாசலம் கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியின் முதல்வராக பொறுப்பேற்றுள்ளார்.

இவரது மனைவி முத்துலட்சுமியும் பார்வையற்றவர். இவர் தற்போது குன்றத்தூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியையாக பணிபுரிகிறார். மாணவர்களுக்கு கல்வி போதிப்பதில் தம்பதியருக்கு கனப்பொருத்தம். முதல்வர் வேலுவை சந்தித்தோம். அவர் நம்மிடம் கூறும்போது, “மிகவும் பின்தங்கிய கிராமமான எங்கள் கிராமத்துக்கு, நான் இந்த நிலைக்கு உயர்ந்திருப்பது தெரியாது. வாழ்வில் முன்னேற வேண்டுமானால், நாம் என்னவாக வேண்டும் என்ற விதையை ஆழ்மனதில் பதிய வைக்க வேண்டும். அப்போதுதான் அதற்கான ஈடுபாடும், முயற்சியும் தொடர்ந்துகொண்டே இருக்கும்.

மாணவர்களுக்கு வகுப்பு எடுப்பதில் எனக்கு எந்தச் சிரமமும் இல்லை. வகுப்பு எடுக்கும்போது மாணவர்கள் கவனிக்கிறார்களா என்பதை அவர்களின் பதிலுரையில் இருந்தே புரிந்து கொள்வேன். என் வாழ்க்கை அவர்களுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடுதான் வகுப்புகளை எடுப்பேன்” என்கிறார். மாணவர்கள் சிலர் கூறும்போது, “வேலு சார் வகுப்பில் சிறிது நேரம் உட்கார்ந்து கவனியுங்கள் என்று எங்களது பேராசிரியர்கள் கூறும் அளவுக்கு அவரது வகுப்புகள் இருக்கும். வகுப்பறைக்குள் உதாரணங்களுடன் அவர் பாடம் நடத்தும்போது எங்களை அறியாமலே பாடத்தின் மீது ஈர்ப்பு உண்டாகும். அவரது வகுப்பு ரசிக்கும்படியாக மட்டுமல்லாமல் உத் வேகமும், தன்னம்பிக்கையும் அளிக்கின்ற வகை யில் இருப்பதால் அவரது வகுப்பை நாங்கள் எப்போதும் தவறவிட மாட்டோம்” என்கின்றனர். பார்வை இல்லை என்றாலும் எண்ணியதை அடைய வேண்டும் என்ற தொலைநோக்கு பார்வை கொண்டவராக இருக்கிறார். இலக்கை அடைய வேண்டும் என்பதில் குறிக்கோளுடன் உழைக்கும் யாருக்கும் வெற்றி நிச்சயம் என் பதற்கு உதாரணமாக நிற்கிறார். பார்வை இல்லாததுதான் குறையே தவிர, தன்னம்பிக்கை நிறைந்த மனிதராய் நமது பார்வைக்கு தெரிகிறார் வேலு.

– K.ரமேஷ்குமார்



# தமிழகத்தை மிரட்டும் சைல்டு செக்ஸ் டூரிஸம்!

மற்றுமொரு 'நிர்பயா' போன்ற சம்பவத்தால் கொந்தளிக்கிறது தமிழகம். இந்த முறை சென்னை அயனாவரத்தில் பாதிக்கப்பட்டிருப்பது பதின்மத்தைக்கூட தொடாத சின்னஞ்சிறு பெண் குழந்தை. அதிலும், கேட்கும் திறன் குறைந்த மாற்றுத்திறனாளிக் குழந்தை. எதிர்படுவோரை எல்லாம் தாத்தா, மாமா, அண்ணா என்றழைத்த வெகுளிக் குழந்தை. அந்தத் தாத்தாக்களும் மாமாக்களும் அண்ணன்களும்தான் அவளைக் குதறிப் போட்டுள்ளார்கள். எங்கிருந்து வந்தது இத்தனை வக்கிரம்?

மனித மனம் விசித்திரமானது மட்டுமல்ல. அது வக்கிரமானதும்கூட. காதல், பாசம், கருணை, கோபம், பரிதாபம், விருப்பு, வெறுப்பு என எல்லா உணர்வுகளையும்போல அது வக்கிரங்களையும் சுமந்தே அலைகிறது. இது அத்தனை பேரிடமும் உண்டு. ஆனால், அதன் அளவீடு எவ்வளவு, அதை எப்படி நிர்வகிக்கிறார்கள் என்பதிலிருந்தே ஒவ்வொருவரும் வேறுபடுகிறார்கள். அதிலும் பாலுணர்வின் வக்கிரம் வரைமுறைகளற்றது. எளிதில் நிறைவடையாதது. ரத்த உறவுகளையே கூறுபோடும். பாலினம் பார்க்காது, வயது தெரியாது. குழந்தைகள், முதியவர்கள் தொடங்கி ஆடு, மாடு, குதிரை வரை அடுத்தடுத்து இரை தேடுவது அது. அயனாவரம் சம்பவத்தைத் தொடர்ந்து சாமானியர்கள் தொடங்கி சினிமா நட்சத்திரங்கள் வரை பொங்குகிறார்கள். கோபமும் ஆத்திரமும் ஆவேசமும் சமூக ஊடகங்களில் வெடித்துச் சிதறுகின்றன. ஆனால், இந்த ஆவேசமும் அற உணர்வுகளும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கிறது என்பதில்தான் இருக்கிறது அடுத்த 'நிர்பயா'வுக்கான ஆபத்து.

**நமது குழந்தைகள் பாதுகாப்பாக இருக்கிறார்களா?**

தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் அளிக்கும் தகவலின்படி நம்மைச் சுற்றி எட்டு நிமிடங்களுக்கு ஒரு குழந்தை பாலியல் ரீதியாக சிதைக்கப்படுகிறது. அதற்கெல்லாம் என்ன தீர்வு வைத்திருக்கிறோம்? அடுத்தவர் குழந்தைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு ஆத்திரப்படும் நாம், நமது குழந்தைகளின் பாதுகாப்புக்கு என்ன முன்னேற்பாடுகளைச் செய்து வைத்திருக்கிறோம். நம்மைச் சுற்றியும் நம் குழந்தைகளைச் சுற்றியும் என்னவெல்லாம் நடந்துகொண்டிருக்கின்றன?

சர்வதேச அளவில் வளர்ந்துவரும் சமூக விரோதச் சுற்றுலா இது. குழந்தைகளை மட்டுமே வன்புணரும் உளவியல் நோயான 'பீடோ ஃபைலிக்' மன நோயாளிகளின் கூட்டங்களால் நடத்தப்படும் பெரும் வணிகம் இது. அமெரிக்காவின் எஃப்.பி.ஐ., இங்கிலாந்தின் தேசிய குற்றக் கண்காணிப்பு முகாமைத் தொடங்கி சர்வதேச கண்காணிப்பு அமைப்பான 'இன்டர்போல்' வரைக்கும் இந்தக் கும்பலைப் பிடிக்கத் தனிப்படைகளை அமைத்திருக்கின்றன. இந்தக் குற்றக் கலாச்சாரம் நம் நாட்டில் மும்பை, கோவா, புனே, டெல்லி, பெங்களூரு, சென்னை உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பரவி பல ஆண்டுகளாகிவிட்டன என்கிறார்கள் குழந்தைகள் விவகாரங்களை கவனித்துவரும் சமூகச் செயல்பட்டாளர்கள்.

"நமது நாட்டில் முதன்முதலாக கோவாவில் தொடங்கியது சைல்டு செக்ஸ் டூரிஸம். உலகம் முழுவதுமிருந்து பாலியல் இச்சைகளைத் தீர்த்துக்கொள்ள பெண்களைத் தேடி தாய்லாந்துக்கு வரும் கூட்டத்தைப் போல கோவாவுக்குக் குழந்தைகளைத் தேடி ஒரு கூட்டம் வருகிறது. 'எஸ்கார்ட்' என்கிற பெயரில் 10 வயது முதல் 15 வயது வரையிலான ஆண், பெண் குழந்தைகளை வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் தங்களுடன் தங்கவைத்துக்கொள்வார்கள். ஒரு நாள், மூன்று நாள், ஒரு வாரம், ஒரு மாதம் என பேக்கேஜெல்லாம் உண்டு. ஒரு நாளைக்கு ஆயிரங்களில் தொடங்கி லட்சங்கள் வரை கட்டணங்கள் கைமாறும். இயற்கைக்கு மாறான என்னென்ன வழிகள் இருக்கின்றனவோ அத்தனை வழிகளிலும் குழந்தைகளை அவர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்துகிறார்கள். இதற்காக அங்கு அரசியல் பிரமுகர் துணையோடு நடக்கும் கட்டப் பஞ்சாயத்துகளில் கோடிகளில் பணம் விளையாடுகின்றன. அவர்களுடன் குழந்தைகள் கழிக்கும் ஒவ்வொரு நிமிடங்களுமே நரகத்துக்குச் சமம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக கோவா மட்டுமல்லாமல், நாட்டின் முக்கிய நகரங்களில் 'பீடோ ஃபைலிக்' நோயாளிகள் சுற்றுலாப் பயணிகளாக சாரை சாரையாக வருகிறார்கள். தமிழகத்தில் சென்னை வடபழனி, சாலிகிராமம், கே.கே.நகர், தி.நகர், கோடம்பாக்கம், போரூர் இங்கெல்லாம் பாலியல் தொழிலைவிட கூடுதல் வருமானம் கொட்டும் தொழிலாக மாறியிருக்கிறது 'சைல்டு செக்ஸ் டூரிஸம்'.

குடும்ப உறவு முறைகளால்தான் குழந்தைகள் பாலியல் ரீதியாக பெருமளவில் துன்புறுத்தப்படுகிறார்கள். கசப்பான, ஜீரணிக்க முடியாத உண்மை இது. எந்நேரமும் இந்தக் குற்றம் நம் வீட்டிலும் நடக்கலாம்.




**"உலகம் முழுவதுமிருந்து பாலியல் இச்சைகளைத் தீர்த்துக்கொள்ள பெண்களைத்தேடி தாய்லாந்துக்கு வரும் கூட்டத்தைப் போல கோவாவுக்குக் குழந்தைகளைத் தேடி ஒரு கூட்டம் வருகிறது.**

எங்கெல்லாம் பெற்றோர்கள் அலட்சியமாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் குழந்தைகள் ஏதோவொரு விதத்தில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதே உண்மை. பள்ளிக்கூடம் தொடங்கி பாதுகாப்பானதாக நாம் கருதும் வீடுகள்வரை நிலைமை இதுதான்.

இந்த உலகை உயிர்ப்புடன் வைத்திருப்பவர்கள் குழந்தைகள் மட்டுமே. ஒரு குழந்தையின் சிரிப்பில் நாம் அத்தனை கவலைகளையும் மறந்துவிடுகிறோம். எனவே, குழந்தைகள் விஷயத்தில் மட்டும் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், அக்கம்பக்கத்தினர், நண்பர்கள், பணியாளர்கள் என யாரையும் கொஞ்சம் எச்சரிக்கையுடனே அணுகுங்கள்; தவறே இல்லை. ஏனெனில், மனித மனதைவிட மிகப் பெரிய வக்கிரக் கிடங்கு உலகில் வேறு எதுவும் கிடையாது!

### குழந்தை தொலைந்துவிட்டால்...

விபத்தில் சிக்கியவர்களுக்கு 'கோல்டன் ஹவர்' எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவுக்குக் காணாமல்போன குழந்தைகளுக்கு முதல் இரண்டு மணி நேரம் 'கோல்டன் ஹவர்' என்கிறார்கள் காவல் துறையினர். எனவே, குழந்தை காணாமல்போனது உறுதியானால் உடனடியாக அவசர எண் 100, 'சைல்டு ஹெல்ப் லைன் எண் 1098' மற்றும் அருகிலுள்ள காவல் நிலையத்துக்குக் குழந்தையின் அங்க அடையாளங்கள், உடையின் நிறம் உள்ளிட்ட தகவல்களைப் பதிவுசெய்யுங்கள். புகைப்படம் மிகமிக அவசியம். சென்னை போன்ற பெருநகரங்களில் இணையம் வழியாக மாநகரக் காவல் துறை ஆணையருக்கும் மின்னஞ் சல் அனுப்புங்கள். வீட்டின், அலுவலகத்தின் பணியாளர்கள், ஓட்டுநர்கள், அக்கம்பக்கத்தில் யார் மீது சந்தேகம் என்றாலும் அவர்களின் அலைபேசி எண்ணைக் குறிப்பிட்டு காவல் துறையிடம் தகவலைச் சொல்லுங்கள். இவையெல்லாம் முதல் ஒரு மணி நேரத்தில் நடக்க வேண்டும். அடுத்த ஒரு மணி நேரத்தில் காவல் துறையினர் சம்பந்தப்பட்ட நபர்களையும் சுற்றுவட்டாரப் பகுதிகளையும் முழுவதுமாக தங்களது கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டுவந்துவிடுவார்கள். கட்டணம் வசூலிக்கும் சுங்கச் சாவடிகள் தொடங்கி, சோதனைச் சாவடிகள், நெடுஞ் சாலை ரோந்து வாகனங்கள், 'ரெட் பிரிகேட் பிரிவு, ப்ளூ பிரிகேட் பிரிவு ஆகிய இருசக்கர வாகன அணியினரும் களமிறக்கப்படுவார்கள்.

– வீ.சிவசங்கரன்


நிருபர்கள் தேவை

பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக
ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

மக்கள் விசாரணை * அருணை முரசு
Cell : 93821 33334 / 044 - 48615321
Email : writermouriyan@gmail.com

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

**05.08.2018 அன்று சென்னை விருகம்பாக்கம்**
**டால்பின் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற**
**10வது சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில்**

**S.ராம்குமார்** ஆகிய என்னை

**மாநில துணைச்செயலாளராக தேர்ந்தெடுத்தமைக்கு**
**மாநில பொதுச் செயலாளர்**
முனைவர் **ஆ. மவுரியன்** அவர்களுக்கும்,

**மாநில, மாவட்ட**
**நிர்வாகிகளுக்கும்**
**மற்றும்**
**பொதுக்குழு**
**உறுப்பினர்களுக்கும்**



## நன்றி.. நன்றி.. நன்றி...

# மக்களின் வரிப்பணம் இங்கு பயன்படாமல் இருப்பதை யார்? யாரை கேட்பது?



தருமபுரி மாவட்டம், வெள்ளோலை ஊராட்சிக்குட்பட்ட ஜாலிக்கொட்டாய் கிராமத்தில் 350க்கும் மேற்பட்டோர் வசிக்கின்றனர். இக்கிராம மக்களின் குடிநீர் தேவைக்காக நான்கு மின் மோட்டார் பொருத்தப்பட்ட மினி டேங்குகளும், நான்கு ஆழ்துளை கைப்பம்புகளும் மற்றும் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் இரண்டு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டியும் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்தது.

கடந்த ஆறு மாதகாலமாக நான்கு மின் மோட்டார்களும், நான்கு கைப்பம்புகளும் பழுதடைந்து இருக்கிறது. மற்றும் இரண்டு மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளுக்கு குடிநீர் வருவதில்லை. இது குறித்து நம்மிடம் தெரிவித்த ஊர் மக்கள் பலமுறை கிளார்க் மற்றும் அதை சார்ந்த அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டு இதுவரை எந்த நடவடிக்கைகளையும் எடுக்கப்படவில்லை. மாறாக அவர்கள் கூறுவது எல்லாம் ஊராட்சிக்கு போதுமான நிதி வருவது இல்லை. எனவே எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை என்பது அவர்களின் பதிலாகவே இருக்கிறது.

இக்கிராம மக்கள் 95% கல்வி அறிவு பெறாதவர்கள். இவர்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைக்காத போது இங்கு கிடைக்கும் சுகாதராமற்ற குடிநீரும் மற்றும் குளோரைடுயுடைய குடிநீரும் பயன்படுத்துவதால் மக்கள் பல நோய்களுக்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே குடிநீருக்காக மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இச்சிரமத்தை யார் யாரிடம் சொல்லுவது?





மேலும், இக்கிராமத்தில் துப்புறவு பணியாளர்கள் குப்பையை எடுத்துச் செல்லாமல் குப்பை தொட்டியின் அருகாமையில் கொட்டி தீயிட்டு வருவது வாடிக்கையாக இருந்து வருகிறது. அவர்களிடம் இதுகுறித்து முறையிட்டும் எந்த பயனும் இல்லை. அதற்கு மாறாக அவர்கள் கூறுவது மூன்று மாத காலமாக தினக்கூலிக் கூட தருவது இல்லை என்றும் கையுறைகளைக் கூட அவர்களே வாங்கும் அவல நிலை இருப்பதாக சொல்லப்படுகிறது.







எனவே ஊராட்சியின் அனைத்து செயல்பாடும் போதுமான நிதி இன்று முற்றிலும் முடங்கி போகும் சூழலை நாம் உணர முடிகிறது.

இறுதியாக இந்த அவலநிலை மாற தமிழ்நாடு அரசு உள்ளாட்சி தேர்தலை நடத்தி தேவையான நிதி பெறுவதற்கு வழிவகை செய்யுமா? அல்லது எப்போது போல ஏதோ ஒன்று கூறி இழுத்தடிப்பு செய்யும் நிலைமை தொடருமா?

இதனை இதுவரை கண்டுகொள்ளாமல் இருக்கும் மத்திய அரசு என்ன செய்யப்போகிறது உள்ளாட்சி தேர்தலை நடத்தி முடிக்காமல் இருப்பதை காரணம் காட்டி நிதியை முடக்கி இருக்கும் நிலைமை தொடருமா? அல்லது தேர்தலை நடத்த வழிவகை செய்யுமா? மாறாக மத்திய அரசு நிதியை கொடுப்பதற்கு முன்வருமா? இதை எல்லாம் யார்? யாரை கேட்பது?

இது மக்களாட்சி நாடு இதை மக்களிடமே விடுவோம்..

**– மா.முனியப்பன், தருமபுரி**

# ராமாயணத்தை உருதில் மொழிபெயர்த்த இஸ்லாமிய பெண்!

உத்தர பிரதேச மாநிலம், கான்பூரைச் சேர்ந்த இஸ்லாமிய பெண் ஒருவர் ராமாயணத்தை உருது மொழியில் மொழி பெயர்த்துள்ளார். கான்பூரில் வசிக்கும் பெண் மருத்துவரான மாஹி தலத் சித்திக் என்பவர் ராமாயணத்தை கடந்த ஒன்றரை ஆண்டுகளாக உருது மொழியில் எழுதி வெளியிட்டுள்ளார். இதுகுறித்து மாஹி தலத் கூறுகையில், அனைத்து மத நூல்களைப் போன்று ராமாயணத்திலும் அமைதி மற்றும் சகோதரத்துவத்தை வலியுறுத்தும் கருத்துகள் இருப்பதால் உருது மொழியில் மொழி பெயர்த்துள்ளேன். 2 ஆண்டுகளுக்கு முன் கான்பூரில் வசிக்கும் இலக்கிய ஆர்வலர் பத்ரி நாராயண் திவாரி ஹிந்தி மொழியில் எழுதப்பட்ட ராமாயண புத்தகத்தை கொடுத்து உருது மொழியில் எழுதும்படி கூறினார். அப்போது தொடங்கிய என் மொழிப்பெயர்ப்பு பயணம் தற்போதுதான் முடிவடைந்தது. ஹிந்துக்கள் மட்டுமின்றி, இஸ்லாமிய சமுதாயத்தினரும் ராமாயணத்தில் உள்ள நல்ல கருத்துகளை தெரிந்து கொள்வதற்காக உருது மொழியில் எழுதியிருக்கிறேன்.





# ‘ஆன்லைன்’ தேர்வு அடுத்த நிலைக்கு உயர்கிறது

## டி.என்.பி.எஸ்.சி.

ஜூலை 4ஆம் தேதி, ‘ஆன்லைன்’ தேர்வுகளை நடத்துவதற்கான ஒப்பந்தங்களை வரவேற்று, 48 பக்க அறிவிக்கை வெளியிட்டு இருக்கிறது தேர்வாணையம் இதன்மூலம், கணினி வழித் தேர்வு முறைக்கு மாறுகிற திட்டம், உறுதி ஆகிறது.

“ஆணையம் நடத்துகிற பல்வேறு நிலை, பணியாளர் தேர்வுக்கான, ‘கொள்குறி வகை கணினி வழித் தேர்வு’ **(Objective Type Computer Based Examination)** நடத்திக் கொடுக்க, அனுபவமிக்க நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தங்கள் (டெண்டர்கள்) வரவேற்கப்படுவதாய், இந்த விளம்பரம் கூறுகிறது. ஆணையத்தின் அதிகாரபூர்வ இணையதளத்தில் **(www. tnpsc.gov.in)** முழு விவரங்களும் தரப்பட்டு இருக்கின்றன. உண்மையில், இந்த அறிவிக்கை (விளம்பரம்) மிக நன்றாக வரையப்பட்டு இருக்கிறது.

தேர்வு தொடங்குவதற்கு முன்பாக, 10 நிமிடங்களுக்கு, தேர்வு குறித்த பயிற்சி **(orientation)** வழங்கப்படும். மனிதக் குறுக்கீடு ஏதும் இன்றி, தேர்வருக்கு ஒதுக்கப்படுகிற கணினியில், ‘ரேண்டம்’ வினாக்கள் தோன்றும். அடுத்த வினாவுக்குத் தேர்வர் ‘கிளிக்’ செய்தால், ஒரு நொடிக்குள்ளாக, அடுத்த கேள்வி, திரையில் வந்துவிடும். ஒரு தேர்வர், ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள நான்கு தெரிவுகளில் இருந்து ஒன்றைத் தேர்ந்தெடுத்து, ‘கிளிக்’ செய்வார். தேர்வரின் எல்லா ‘க்ளிக்’குகளும், நேரக் கணக்குக்காக, பதிவு செய்யப்படும்.

தேர்வு முடிந்த ஒரு மணி நேரத்துக்குள் எல்லா விடைகளும் மத்திய ‘செர்வருக்கு’ மாற்றம் செய்யப்பட்டுவிடும். பாதுகாப்பு கருதி இந்த விடைகள், ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் அங்கே சேமித்து வைக்கப்படும். உள்ளூர் மையத்தில் எந்தத் தேர்வரின் எந்தப் பதிவும் இருந்ததற்கான அடையாளம் கூட இருக்காது.

தேர்வு முடிந்த 24 மணி நேரத்தில் தேர்வு தொடர்பான அத்தனை நடைமுறைகளையும் முடித்துவிட்டு, அதற்கான சான்றிதழும் ஆணையத்துக்கு, ஒப்பந்த நிறுவனம் அனுப்பிவிட வேண்டும். தேர்வு முடித்த கையோடு, 'கருத்துப் படிவம்' **(feedback form)** ஒன்றும் தேர்வர்களுக்கு வழங்கப்படும். இதுவும் அப்போதே அவ்வாறே பதிவு செய்யப்படும். இதற்குப் பிறகு, தேர்வர்களுக்கு கேள்வி கேட்கிற உரிமையை நல்கும் **'challenge window'**, ஏழு நாட்களுக்குத் திறந்தே இருக்கும். தேர்வு தொடர்பான சந்தேகங்கள், கேள்விகளை இங்கே பதிவு செய்யலாம். உண்மையிலேயே மிகப்பெரிய எண்ணிக்கைதான். ஆகவேதான், ஆன் லைன் தேர்வு முறை அவசியம் ஆகிறது. முதல் ஆண்டில், 2 முதல் 3 லட்சம் பேர் எழுதுகிற தேர்வுகளுக்கு, ஆன்லைன் முறை அறிமுகப்படுத்தப்படும்.

படிப்படியாக எல்லா தேர்வுகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இதுவும் அறிவிக்கை யிலேயே சொல்லப்பட்டு இருக்கிறது. தேர்வுக்கு முன்பு, தேர்வின்போது, தேர்வுக்குப் பின்பு என மூன்று நிலைகளும், ஒப்பந்தத்தில் அடங்கும். தேர்வர்களுக்கு அனுப்புகிற குழுத் தகவல் **(bulk email)**, வருகைப் பதிவேடு, அடையாளங்களை சரி பார்த்தல் ஆகிய பணிகள்; தேர்வு மையத்தில் தேர்வர்களுக்குப் பாதுகாப்பு, தகவல் பாதுகாப்பு, கணினிச் சேவை பாதுகாப்பு தொடர்பான கடமைகள்; மதிப்பீடு செய்தல், மதிப்பெண் அடிப்படையில் தரவரிசை தயாரித்தல் ஆகிய தேர்வுக்குப் பிந்தைய செயல்பாடுகள் ஆகியன, ஒப்பந்ததாரரின் பணிகள் ஆகும். தடை இல்லாத இணையத் தொடர்பு வசதி, மின்சப்ளை பாதிக்கப்பட்டால் உடனடி 'ஜெனரேடர்' இணைப்பு, 5 மணி நேரத்துக்குக் குறையாத 'பேக் அப்' பாதுகாப்பு, குடிநீர், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அனைத்தையும் ஒப்பந்ததார நிறுவனம் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வகைத் தேர்வுகள் நடத்துவதற்கான, 'நிலையான செயல்முறை மரபு' **(standard operating procedure)** கண்டிப்பாகப் பின் பற்றப்பட வேண்டும். வினாத்தாள், விடை களை 'பாதுகாப்பாக' மாற்றம் செய்கிற நடைமுறை உள்ளிட்ட அனைத்து செயல் பாடுகளும் 'மூன்றாவது நபர்' மூலம், பாதுகாப்புத் தணிக்கைக்கு உட்படுத்தப்படும். தொழில்நுட்பக் குறைபாடு ஏதும் எழாத வகையிலும், 'ரகசியம்' காப்பாற்றப் படுவதற்கான வழிமுறைகளிலும் மிகுந்த சிரத்தை எடுக்கப்பட்டு இருப்பதாகவே தோன்றுகிறது. பொதுத் தேர்வுகள், போட்டித் தேர்வுகள் நடத்துவதில், தமிழகம் எப்போதுமே சிறந்து விளங்குகிறது.

சமீபத்தில் கூட, பல லட்சம் பேர் எழுதிய 'குரூப் 4' தேர்வின் போது, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அபாரமான நிர்வாகத் திறமையை வெளிப்படுத்தியது. 'ஆன்லைன்' தேர்வு முறையின் சாதகங்கள், இளைஞர்களுக்குப் பயன்படும் என்றோ, ஒரு மேற்பார்வையாளராக மட்டும் இருந்தால், இன்னமும் சிறப்பாகச் செயல்பட முடியும் என்றோ ஆணையம் கருதி இருக்கலாம். தவறில்லை. ஒப்பந்த அடிப்படையில் 'ஆன்லைன்' தேர்வுக்கு மாறுகிற முயற்சிக்கு, கடும் எதிர்ப்புக் குரல் எழுந்துள்ளது. ஆட்சேபங்களுக்குத் தகுந்த விளக்கங்களை அளித்து, தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு, தேர்வாணையத்துக்கு மிக நிச்சயமாக இருக்கிறது. செய்யும் என்று எதிர்பார்க்கலாம். முறைகேடு செய்வது என்று முடிவு எடுத்துவிட்டால், எந்தத் தேர்வு முறையுமே முழுக்கவும் பாதுகாப்பானது இல்லை. அது மட்டுமன்றி, ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிற நேர்மையின்மையும் நிர்வாகச் சீர்கேடும், ஒரே நாளில் மாறிவிடுமா என்ன..?

நவீனத் தொழில் நுட்பத்துக்கு மாறுவதும், விரைந்த செயல்பாட்டுக்கு வழி கோலுவதும், இளைஞர்களின் எதிர்காலத்துடன் நேரடி யாகத் தொடர்புடைய துறைக்கு மிகவும் அவசியம். பல லட்சக்கணக்கான இளை ஞர்கள், போட்டித் தேர்வுகள் எழுதி முடித்து, அதன் முடிவுகளுக்காக மாதக் கணக்கில் காத்துக் கிடக்கிற அவலம், இனியும் தொடர அனுமதிக்கக் கூடாது. ஆரோக்கியமான மாற்றத்தை வரவேற்பதே அறிவுடைமை. 'ஆன்லைன்' தேர்வு முறை மூலம், தேர்வாணையத்தின் மீது இளைஞர்களின் நம்பிக்கை மேலும் வலுவடையவே செய்யும். பார்ப்போம். நமது நம்பிக்கை பொய்க்காது என்று நம்புவோம்.

**– சங்கர்**

வெற்றிக்கும் தோல்விக்கும்
வித்தியாசம் அதிகம் இல்லை.
கடமையை செய்தால் வெற்றி!
கடமைக்கு செய்தால் தோல்வி!

# சிந்தனை முத்துக்கள்

நீ உன்னுடைய நண்பனுக்கு பணம் தந்து உதவ முடியாமற் போகும்பட்சம், ஒரு ஆறுதல் வார்த்தையைக் கூறி அவனுக்கு உதவலாம்.










நமக்கு இருப்பது ஒரு முகமே - ஆனால்
நம்முள் இருப்பது பல முகமே - அதனை
நன்றாய் நாம் அறிந்தால் பொய்மைகள்
அற்றுப் போய் விடுமே.....

நீ தனிமையில் இருக்கும்போது
உனக்கு என்ன என்ன தோன்றுகிறதோ
அதுதான் உன் வாழ்க்கையைத்
தீர்மானிக்கும்

– விவேகானந்தர்




நன்றி: தி இந்து




**பழக்கங்களை எளிதாக பெற முடியாது. அனுபவத்தின் மூலம் பெறப்படும் சோதனை மற்றும் துன்பங்களின் வழியாகவே ஆன்மாவை வலுவூட்டவும், லட்சியத்தை தூண்டவும், அதன்மூலமே வெற்றியை அடையவும் முடியும்.**

**நடந்து முடிந்த எதையும் நான் ஒருபோதும் கவனிப்பதில்லை. எதை செய்து முடிக்க வேண்டும் என்பதில் மட்டும் கவனமாக இருக்கிறேன்.**

– புத்தர்



2004 சுனாமியைத் தொடர்ந்து கடல் மீனுணவு குறித்த பெரும் புரளி ஒன்று கட்டவிழ்த்து விடப்பட்டது: 'மனிதச் சடலங்களைத் தின்ற கடல் மீன்களை வாங்கி உண்ணாதீர்'. மீண்டும் மக்கள் இயல்பான மீனுணவுக்குத் திரும்புவதற்கு ஊடகங்களில் சில கடலறிவியல் அறிஞர்களைப் பேசவைக்க வேண்டியிருந்தது. 'மீன்கள் மனிதச் சடலத்தை உண்பதில்லை. மேலும், மீன்கள் எதைத் தின்றாலும் அது மீன் புரதமாக மாறிவிடுகிறது' என்கிற அறிவியல் உண்மையை மக்கள் ஏற்றுக்கொள்ளச் சில காலம் பிடித்தது.

போர்னியோ உள்ளிட்ட கிழக்காசியக் காடுகளை அழித்து, எண்ணெய்ப் பனை சாகுபடியில் இறங்கியிருந்த பெருமுதலாளிகளின் கைக்கூலிகளாய் மாறிய சில இந்திய அறிவியலாளர்கள், இந்தியப் பாமாயில் சந்தைக்கு ஆதரவாக நின்று தேங்காய் எண்ணெய்க்கு எதிராகப் பீதியூட்டும் பரப்புரையை மேற்கொண்டனர். கேரள தேங்காய்ச் சாகுபடிப் பொருளாதாரம் பெரும் சரிவைச் சந்தித்தது. 'இதய நோய்க்கும், தேங்காய் எண்ணெய்க் கொழுப்புக்கும் தொடர்பில்லை' என்னும் எளிய உண்மை மக்களை எட்டுவதற்குள் தென்னை விவசாயிகளின் வாழ்வு சிதைந்துபோனது.

இன்று மீன் மீண்டும் சர்ச்சைக்குள்ளாகி இருக்கிறது. ஆந்திராவிலிருந்து வரும் மீன்களைத் தடைசெய்யவும் அதன் உணவுத் தரத்தைத் தணிக்கைசெய்யவும் ஒடிசா, அசாம் அரசுகள் உத்தரவிட்டுள்ளன. தமிழ்நாட்டு மீனை கேரள அரசு தடைசெய்துள்ளது. புவனேஷ்வர், சென்னை உள்ளிட்ட பல நகரங்களில் மீன் அங்காடிகளில் அதிகாரிகள் திடீர் சோதனைகள் நடத்தி நன்னீர் / கடல் மீன்களில் ஃபார்மாலின் என்னும் கரிம நச்சுத் திரவம் தடவப்பட்டுள்ளதை உறுதிசெய்துள்ளனர். என்ன நடக்கிறது இங்கே?

பொதுவாக, மீனவர்கள் கரை சேர்க்கும் அறுவடையில் ஃபார்மாலின் நச்சினைத் தடவுவதில்லை. அதற்கான தேவையும் இல்லை. ஆழ்கடல் மீனவர்கள்கூட மீன்களை நொறுக்கிய பனிக்கட்டிகளிட்டு சேமிப்பறையில் வைத்து, அப்படியேதான் கரையிறக்குகிறார்கள். அப்படியென்றால், ஃபார்மாலின் நச்சு எந்த நிலையில் தடவப்படுகிறது? என்னுடைய ஆழமான சந்தேகம் மீன் வணிகத்தில் கால் பதித்திருக்கும் பெருநிறுவனங்களை நோக்கியே செல்கிறது.

# தமிழ்நாட்டு மீன்கள் தமிழ்நாட்டிலேயே கிடைத்தால் பிரச்சினையே இல்லை!



தமிழ்நாட்டிலேயே பிடிக்கப்பட்டு, அந்தந்த ஊர்க் கரைகளையே வந்தடையும் மீன்களில் எதுவும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. ஏனென்றால், அதற்கான தேவையில்லை. மீன்வள அமைச்சர் ஜெயக்குமார் சொல்வதுபோல, "தமிழ்நாட்டு மக்களின் தேவைக்குப் போதுமான அளவு கடல் மீன்கள் இங்கே கிடைக்கவில்லை" என்பதே கள நிலவரம். நிறைய நாம் வெளி மாநிலங்களிலிருந்து வாங்குகிறோம். ஆக, வந்த வேகத்தில் விற்கப்படும் மீன்களைப் பாதுகாக்க வேண்டிய தேவைகள் ஏதும் இல்லை. ஆனால், மாநிலங்கள் கடந்து செல்லும், மாநிலங்கள் கடந்துவரும் மீன்களை நாட்கள் கடந்து விற்க இந்த நிறுவனங்கள் என்னென்ன செய்கின்றன என்பது நமக்குத் தெரியவில்லை.

அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது ஒருபுறமிருக்க.. மறுபுறம் தமிழ்நாட்டில் பிடிக்கப்படும் மீன்கள் தமிழ்நாட்டிலேயே விற்கப்படுவதற்கான சாத்தியங்களை அதிகரிப்பதையும் முக்கியமான தீர்வாக இங்கே பார்க்க வேண்டும். ஏனென்றால், தமிழ்நாட்டு மீனவர்களின் அறுவடையில் கணிசமான ஒரு பகுதி பிற மாநிலங்களுக்குப் போய்விடுகிறது. தவிர, பிடிக்கப்படும் மீன்களை நல்ல முறையில் நுகர்வோரிடம் பாதுகாத்துச் சேர்ப்பதற்கான வசதிகளும் இங்கே குறைவாக இருக்கின்றன.

நான் குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவன். தமிழ்நாட்டில் ஆழ்கடல் மீன்பிடிக்குப் பேர் போன பகுதி இது. ஆனால், இங்கு பிடிபடும் பெரும்தொகை மீன்கள் கேரள, மகாராஷ்டிர, குஜராத் கடற்கரைகளுக்குப் போய்விடுகின்றன. காரணம் என்ன? நல்ல சூழல் நம்முடைய கடற்கரையில் இல்லை.

இந்த விஷயத்தில் தமிழ்நாட்டுடன் குஜராத்தை ஒப்பிடலாம் என்று நினைக்கிறேன். குஜராத் மாநிலத்தில் 10% மக்கள் மட்டுமே அசைவர்கள். ஆனால், இந்தியக் கடல்மீன் அறுவடையில் 22% குஜராத் கடற்கரையில் கரையிறங்குகிறது. குஜராத்தில் கரைசேரும் அறுவடையில் 90% பிற மாநிலங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன. காரணம், அதற்கான அடிப்படைக் கட்டுமானங்களையும் மீன்வளத் தொழில் கட்டமைப்புகளையும் நிறுவிக்கொள்ளச் சாதகமான சூழல் அங்கு இருக்கிறது.

குஜராத்தின் போர்பந்தர், மொண்ட்ரெல், விராவல் விசைப்படகு கட்டும் மையங்கள் நம் நாட்டில் பிரசித்தமானவை. விராவலில் மட்டும் 67 மீன் பதனிடு மையங்கள் உள்ளன. சிஐஎஃப்டி, சிஎம்எஃப்ஆர்ஐ மையங்களும், மீன்வளக் கல்லூரியும் அங்கு உண்டு. நாகர்கோவில் நகரத்தின் அளவே உள்ள விராவலில் ஆறு விசைப்படகு அணையும் தளங்கள் உள்ளன. ஏறத்தாழ 5,000 விசைப்படகுகள் அங்கு அணைகின்றன. விராவல் இந்தியாவின் மிகச் சிறந்த உயர் தொழில்நுட்ப மீன்பிடிக் கிராமம் ஆகும். இந்தியாவின் மிகச் சிறந்த மீனவர்கள் வாழும் கன்னியாகுமரிக் கடற்கரையில் இவை போன்ற வசதிகள் இருந்தால், தமிழ்நாட்டு மீனவர்கள் பிடிக்கும் மீன்கள் வெளியே போகாது. உடனுக்குடன் நம்முடைய கரைகளை வந்து சேரும் அவை வெகுசீக்கிரம் சந்தையையும் வீட்டையும் வந்தடையும். மீனவர்கள் நுகர்வோர் இடையே மாறும் கைகளைக் குறைக்கவும், அதாவது இப்படியான நிறுவனங்களைத் தவிர்க்கவும் இது உதவும்.

பெருங்கடைகளில் இன்று சிம்லா, காஷ்மீர், சீன ஆப்பிள்கள், ஆஸ்திரேலிய கிவிகள் என்று ஏராளமான காய்கனிகள் தொலைதூரங்களிலிருந்து வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், இனம் புரியாத அச்சத்துடனேயே அவற்றைக் கடக்க வேண்டியிருக்கிறது. காரணம் என்ன? அவை நீண்டநாள் கெடாமல் இருப்பதற்கு, பொருளின் அளவை / எடையை / கவர்ச்சியை அதிகரிப்பதற்கு வேதிமங்கள் தடவப்படுகின்றன. பற்பல குயுக்திகள் கையாளப்படுகின்றன என்ற நம் சந்தேகத்தில் உண்மையும் இருக்கிறது. எந்த உணவுப் பொருளுக்கும் இது நடக்க வாய்ப்புண்டு. வெளி மாநிலங்களிலிருந்து கொண்டுவரப்படும் ஆட்டிறைச்சி சம்பந்தமாக சில ஆண்டுகளுக்கு முன் வந்த செய்திகள் சிலருக்கேனும் நினைவிருக்கலாம்.

சிறந்த தீர்வு எதுவென்றால், நம்மூர் சரக்கு நம்மை விரைவாக வந்தடையவும் நம்முடைய உணவுத் தேவையை நம்மூரிலிருந்தே முழுமையாக உருவாக்கிக்கொள்வதும்தான். இந்தியர்களுக்குச் சராசரியாக ஆண்டுக்கு 15 கிலோ மீன் புரதம் தேவைப்படுகிறது. ஆனால், கிடைப்பதோ 8 கிலோ மட்டுமே. நமக்குப் புரதம் கொடுப்பதிலேயே விலை மலிவானதும் மீன்கள்தான். ஆக, மீன்களை விட்டு நாம் விலகிவிட முடியாது. மீனவர்கள் பிரச்சினையைக் கரிசனத்தோடு கவனிப்பதுதான் நல்ல மீன்களுக்கான தீர்வாக அமையும்!

– **தரணி**

# அறிவு விளக்கேற்றும் ஆசான்

தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் பழங்குடி மக்கள் வாழும் நீலகிரி மாவட்டத்தில், இன்றளவும் மிகவும் வறுமையான சூழலில், முதல் தலைமுறையாய் பள்ளிகளுக்கு வரும் மாணவர்களே அதிகம். இதுபோன்ற கல்வி, மருத்துவம், பிற வசதிகள் சென்றடையாத வனப்பகுதிகளை ஒட்டிய கிராமங்களுக்குச் சென்று, மாலை நேர சிறப்பு வகுப்புகளுக்கான மையத்தை உருவாக்கி, வீட்டுப் பாடத்துடன் ஆக்கத் திறனையும் அளித்து, அதில் வெற்றியும் கண்டுள்ளார் சாமுவேல் பிரபாகர்.

இத்தகைய சிறப்பு மையங்கள் முதலில் தொடங்கப்பட்ட இடம், உதகையில் இருந்து 40 கி.மீ. தொலைவில் இருக்கும் மாயார். இங்கு கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்த இருளர், குறும்பர் மாணவர்களுக்கு மாலை நேர சிறப்பு வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்தார். ஆரம்பத்தில் யாரும் ஆர்வம் காட்டாத நிலையில், பின்னர் மாணவர்கள் ஒவ்வொருவராக வரத் தொடங்கினர். தற்போது, 40க்கும் அதிகமான மாணவர்கள் படிக்கின்றனர்.

இதைத் தொடர்ந்து மசினகுடி, உதகையை அடுத்த அன்பு அண்ணா காலனி ஆகிய பகுதிகளில் மையங்களை உருவாக்கி, சிறப்பு வகுப்பைத் தொடங்கினார். இம்மையங்களுக்கு 2 ஆசிரியைகள் உட்பட 6 ஆசிரியர்களை நியமித்துள்ளார். இதற்கான கட்டிடங்களை சொந்தமாகவும், வாடகைக்கும் ஏற்பாடு செய்துள்ளார். இதற்காக மாதம் ரூ.20 ஆயிரம் செலவாகிறது. இதை சகோதரியுடன் பகிர்ந்துகொள்கிறார். இதுபற்றி சாமுவேல் பிரபாகர் கூறுவதாவது:

அனைவருக்கும் பொதுவான, சமமான கல்வி கிடைக்க வேண்டும். இன்றைய சூழலில் மிகவும் ஏற்ற தாழ்வு மிகுந்ததாக கல்வி மாறிவிட்டது. மதிப்பெண்ணை மட்டுமே கொண்டு, மதிப்பிடும் நிலை வேதனை அளிக்கிறது. இதனால், மாணவர்களின் ஆக்கத் திறன் பாதிப்பதோடு, வாழ்வை எதிர்கொள்ளும் திறனும் இல்லாமல் போகிறது.

எனவே, பணி ஓய்வுக்குப் பிறகான எனது வாழ்வில், உரிமைகள் மறுக்கப்பட்ட, அடிப்படை வசதிகள் சென்றடையாத பழங்குடி மற்றும் தலித் மாணவர்களை கரை



ஏற்றும் சிறிய துடுப்பாக இருக்க வேண்டும் என விரும்பினேன். அதற்கான ஆரம்பப் பணிகளை தொடங்கி உள்ளேன். அதில் ஒரு சிறு அங்கம்தான் மாலை நேர சிறப்பு வகுப்புகள்.

மாயார், மசினகுடி, அன்பு அண்ணா நகர் ஆகிய 3 கிராமங்களுக்கு சென்று பார்த்தபோது, மாணவர்கள் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து பள்ளிக்கு வருவது என்பதே போராட்டம் நிறைந்த ஒன்று. ஏழ்மை மட்டுமன்றி, இவர்களது பெற்றோர் பெரும்பாலும் கல்வியறிவு இல்லாதவர்களாக இருப்பதும் இதற்கு முக்கிய காரணம். அதனால், பல குழந்தைகளிடம் வகுப்பறை யில் கற்றல் திறன் குறைந்தே காணப்படுகிறது. இவர்களை கல்வியில் உயர்த்த வேண்டும் என முடிவு செய்து, மாலை 6 முதல் 8 மணி வரை சிறப்பு வகுப்புகளை தொடங்கினோம்.

வன விலங்கு நடமாட்டம் உள்ளிட்ட பல இன்னல்களை தாண்டி, மாணவர்கள் வரவேண்டிய சூழல். இதனால், அந்தந்த கிராமத்தில் ஒரு மையம் தொடங்கினோம். இலவசம் என்றால் மதிப்பின்றி போகும் என்பதால், நாளொன்றுக்கு ரூ.1 கட்டணம் வசூலித்தோம். அதுவும் கட்டாயம் இல்லை. தற்போது 150க்கும் அதிகமான மாணவர்கள் உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

முன்னொரு காலத்தில் காலரா, பிளேக் உள்ளிட்ட கொடிய நோய் பாதிப்பில் துவண்டு கிடந்த நோயாளிகளை கனிவுடன் அரவணைத்து வைத்தியம் பார்த்தவர்தான் சாமுவேலின் தாத்தா. அம்மா அரசுப் பள்ளி ஆசிரியர், அப்பா அரசு ஊழியத்துடன் மக்கள் தொண்டாற்றியவர். இவர்களின் பாரம்பரியத்தில் வந்த சாமுவேல் பிரபாகர், 30 ஆண்டுகள் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆசிரியப் பணியாற்றியவர். இறுதி ஆண்டில்கூட, தான் பணிபுரிந்த மலைக் கிராம அரசுப் பள்ளியில் 100 சதவீத தேர்ச்சி அளித்துவிட்டுதான் ஓய்வுபெற்றார்.

“இன்னும் பல கிராமங்களில் மாலை நேர சிறப்பு வகுப்பு மையங்களை உருவாக்கி, அவர்களின் வாழ்வில் ஒளியூட்ட என் வாழ்நாள் முழுவதும் போராடுவது மட்டுமே கனவாக உள்ளது” என்கிற சாமுவேல் பிரபாகர் மகத்தான ஆசான்தான்.

– குருதேவ்


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

# மக்கள் விசாரணை

மக்களின் மனக்குமுறல்

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு - 7 ஆகஸ்டு 2018 இதழ் - 3

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் சார்பாக
வெளியிடுபவர் – ஆசிரியர்
முனைவர் **ஆ.மவுரியன்**, B.A., M.A., Ph.D.,

● ஆசிரியர் குழு
**V.அருணாச்சலம், A.C.குமார்**

● நிர்வாக ஆசிரியர்
**வீ.சிவசங்கரன்,** B.B.A.,

● துணை ஆசிரியர்கள்
**கே.ரமேஷ்குமார், D.ரவி, எஸ்.சரவணன், பி.மாரிமுத்து, வீர ஆறுமுகம், M.தரணி, V.சங்கர், அ.மு.ரமணாத்திரி, அனந்த கிருஷ்ணன்**

● முதன்மை செய்தியாளர்கள்
**S.ராம்குமார்** சேலம், **வி.சத்தியராஜ்** நாமக்கல், **A.பாலகிருஷ்ணன், செந்தில்குமார்** கோவை, **R.ஜெயா, K.ஷமீம் ஷகிலா** தென்சென்னை, **பா.சுப்பிரமணியன்** திருநெல்வேலி, **நாகராஜ்** மூணாறு, **மாரிமுத்து** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்** தென்காசி, **ராமசுப்பிரமணியன்** ராஜபாளையம், **சிலம்பரசன்** தர்மபுரி, **வெங்கடேசன்** தி.மலை, **S.ரமேஷ்**

● நிருபர்கள்
**A.D.ராஜேந்திரன், P.ராமலிங்கம், ஆப்ரகாம், S.ஏழுமலை எம்.நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, சதீஷ், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஆரணி ஏழுமலை, சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், N.குப்புசாமி, நீலகண்டன், N.சீனிவாசன், M.முருகன், G.ஆனந்த்குமார், ராஜேஷ், கிஷோர், முரளி**

● சட்ட ஆலோசகர்கள்
**M.குணசீலன்** B.Com., M.L.,
**M.சுதாகர்** B.Sc., B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை)

● புகைப்பட நிருபர் : **M.சந்தோஷ்சிவன்**

● இதழ் வடிவமைப்பு: **4 மீடியா டிசைன்ஸ்**

அலுவலகம்:
**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை 600 001.
E-mail: writermouriyan@gmail.com
news@makkalvisaranai.com / www.makkalvisaranai.com
Cell : 93821 33334 / 044 -48615321

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

**05.08.2018 அன்று சென்னை விருகம்பாக்கம்**
**டால்பின் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற**
**10வது சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில்**

முனைவர் **M.சத்தியராஜ்** ஆகிய என்னை

**மாநில துணைத் தலைவராக** தேர்ந்தெடுத்தமைக்கு

**மாநில பொதுச் செயலாளர்**

முனைவர் **ஆ. மவுரியன்** அவர்களுக்கும்,

**மாநில, மாவட்ட**
**நிர்வாகிகளுக்கும்**
**மற்றும்**
**பொதுக்குழு**
**உறுப்பினர்களுக்கும்**



**நன்றி.. நன்றி.. நன்றி...**

# கள்ளச்சாராய விற்பனை ஒழியுமா?

வாணியம்பாடி அடுத்த தொரையேரி இரயில்வே பாதையருகே உள்ள தென்னந்தோப்பில் சாராய வியாபாரம் அமோகமாக நடைபெறுகிறது.

ஒரு சாராய பொட்டலம் விலை 20ரூ. 100 ரூபாய்க்கு வாங்கினால் ஒரு சாராய பொட்டலம் இலவசமாக வழங்கப்படுகிறதாம். தமிழ் நாடு ஆந்திர எல்லைப்பகுதியான மாதகடப்பா மற்றும் வீரணமலை காடுகளில் கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகிறது.

அங்கிருந்து ஹோல்சேல் வியாபாரியான திருப்பத்தூர் வெங்காயப்பள்ளியை சேர்ந்த சங்கர் என்பவன் வீரணமலை அடிவார கிராமம் திருவாபாளையம் வழியாக சாராயத்தை கடத்தி வருகிறார்.

மேலும் வாணியம்பாடி சுற்றி உள்ள கிராமங்களில் இருக்கும் சாராய கடைகளுக்கு சப்ளை செய்யப்படுவதாக தகவல் மற்ற நேரங்களில் தொரையேரி பகுதியில் பவுன் என்பவருக்கு சொந்தமான சாராய கடையின் விற்பனையாளராகவும் பணியாற்றி வருகிறார்.

சங்கர் செல் நம்பருக்கு ஒரு ரிங் விட்டால் வாடிக்கையாளர் உள்ள



இடங்களுக்கு சாராயத்தை டோர்டெலிவரி செய்யப்படுகிறதாம்.

இது குறித்து வாணியம்பாடி கலால் காவல் துறை காவலருக்கு தகவல் தெரிவித்தால் அவர் கூறியதாவது சார் நான் சாதாரண காவலர் இதுபோன்ற தகவல்களை நீங்கள் கலால் ஆய்வாளர் அவர்வர்களிடம் தான் கூற வேண்டும். இது குறித்து தகவல் பெற தனக்கு அதிகாரம் இல்லை என கூலாக கூறினார்.

இது குறித்து சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சாராய வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்களா?

– தமிழகிலன்

# குடிநீருக்காக அவதிப்படும் மக்கள்!



ஆம்பூர் சர்கரை அலை பகுதியில் உள்ள கிராமப்பகுதி வடபுதுப்பட்டு.. அங்குள்ள பகுதிகளில் கடந்த சில மாதங்களாக சரியான குடிநீர் வசதியில்லை.. 10 நாட்களுக்கு ஒருமுறை அல்லது இரண்டு மூன்று வாரத்திற்கு ஒருமுறை என குடிநீர் வழங்குகின்றனர்.. இதனால் அங்கு வாழும் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.. பல முறை அரசு அதிகாரிகள் மற்றும் ஊர் தலைவர்கள் குடிநீர் வாரியம் எங்கு முறையிட்டும் பலனில்லை.. மனு கொடுக்க சென்ற பொதுமக்களுக்கு எவரும் சரியான பதில் அளிக்காமல் இங்கு இப்படித்தான் நடக்கும் ஒன்றும் செய்ய முடியாது என பதில் கூறி மனுவை நிராகரிக்கின்றனர்.. இதனால் பொதுமக்கள் குடிநீர்காக மிகவும் சிரமப்படுகின்றனர்.. அப்பகுதியின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றன..

# சர்க்கரையின்றி காமத்துப்பால் இனிக்க...

இனிப்பு நோயாளரின் அதிகக் கசப்பான தருணம், 50களில் தங்களுக்கு ஏற்படும் உடலுறவுப் பிரச்சினைதான். ஆண் பெண் இருவருக்கும், கட்டுப்பாடற்ற சர்க்கரையால், உடலுறவில் ஆர்வமின்மை முதல், அதில் மகிழ்வாக ஈடுபட இயலாத நிலைவரை பல சிக்கல்கள் அப்போது ஏற்படும். இதனால் உருவாகும் உளவியல் சிக்கல்கள், உறவுச் சிக்கல்கள், குடும்பப் பிரச்சினைகள்ஞ் ஏராளம்!

காமத்தை இயல்பாக வெளிப்படையாகப் பேச இயலாத ஒரு சமூகத்தில், இந்தப் பிரச்சினையின் தீவிரம் இன்று சத்தமில்லாமல் அதிகரித்துவருகிறது. கூடவே இந்தக் கூச்சம் கொடுக்கும் மவுனத்தில், இதற்காகவென்றே கூச்சலிட்டு விற்கப்படும் சந்தர்ப்பவாத போலி மருந்துகளும் மருத்துவச் சந்தையில் நிறைய உள்ளன.

பெண்ணுக்கு இயல்பாகவே மாதவிடாய் முடியும் நேரத்தில் ஏற்படும் மன அழுத்தமும் அப்போது ஏற்படும் குடும்பச் சுமைகளும் ஒருபுறம் இருக்க, அதே நேரம் சர்க்கரையும் சேர்ந்துகொண்டால், அதைச் சரிவரக் கவனிக்காதபோது, அந்தப் பெண்ணுக்கு உடலுறவில் ஆர்வமின்மை உருவாகும்.

ஒருபக்கம் ஈஸ்ட்ரோஜன் குறைவு. இன்னொரு பக்கம் சர்க்கரைக் கட்டுப்பாடு இல்லாமல் போவதால், பாலியல் ஹார்மோனும் குறைவுபட, பெண் மனத்தில் எதிலும் ஈடுபாடில்லாத வெறுமை நிறைந்திருக்கும். அன்போடு அரவணைக்க வரும் கணவனிடமிருந்து விலகுவதும், இனிய



முக மொழி மறந்து, கடுஞ்சொல் கசியும் முகத்தோடும் அவள் நடமாட, அங்கே உறவுச்சிக்கல் உதிக்கும்.

இதுவே ஆண்களில், அதுவரை 'கண்ணே மணியே' எனக் காதல் மொழி உதிர்த்த காலம் போய், பரபரப்பு முகம் காட்டத் தொடங்குவது நடக்கும். இட்லியைப் பரிமாறும்போது 'என்ன ஆச்சு இவருக்கு?' என ஆதங்கமாய் காரணம் தேடும்போது, அன்புடன் பரிமாறும் அவளின் காதலை ஒதுக்கித் திருப்பும் உதாசீனத்துக்கு ரத்தத்தில் இனிப்பு கூடியதே காரணம்.

'அப்படியெல்லாம் இல்லை. அன்பும் ஆர்வமும் இருக்கிறது. ஆனால், மகிழ்வைக் கூட்டும் இறுதிக்கு எடுத்துச் செல்ல ரத்தம் மட்டும் 'அங்கே' பொங்க மறுக்கிறது' என்பதுதான் பலரின் பிரச்சினை. குறிப்பாய் இன்சுலின் தேவைப்படாத, மருந்துகளால் சர்க்கரையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் என்.ஐ.டி.டி.எம். **(NIDDM - Non Insulin Dependent Diabetes Mellitus)** நோயாளிகளுக்கு, இந்தச் சூழல் அதிகம் வருவதுண்டு. நவீன மருத்துவம் இதை, 'எரக்டைல் டிஸ்ஃபங்ஷன்' **(Erectile dysfunction),** அதாவது ஆணுறுப்பு விரைப்புத்தன்மைக் குறைபாடு என்கிறது.



விளைவு? அழகான, அற்புதமான கணங்கள் அத்தனையும் இருவருக்குள்ளும் அரைகுறையாய் முடிய, இருவர் இடையேயும் ஏமாற்றம் ஏராளமாய்ப் பற்றிக்கொள்கிறது. இந்நிகழ்வு அடிக்கடி நிகழும்போது, இனிப்பு நோயருக்கு இயல்பாய் தாழ்வு மனப்பான்மை தொற்றிக்கொள்வதும், 'மோகத்தைக் கொன்றுவிடு. அல்லால் எந்தன் மூச்சை நிறுத்திவிடு' எனத் தொடர்பில்லாமல் பாடத் தொடங்குவதும்கூட, அந்த விரக்தியில் வாடிக்கையாகிவிடுகிறது.

சர்க்கரைக் கட்டுப்பாடுதான் வரும் முன் காக்கும் ஒரே வழி. என்னதான் மருந்துகள் உதவியால், இந்தச் சிக்கலைக் களைய முடியும் என்றாலும், கவிதையாய் எழுத வேண்டிய காமத்தை, டியூஷன் வைத்துக் கணக்குப் பாடம் படிக்க வேண்டியது மாதிரியான கட்டாயம் ஏற்படும் என்பது வலியுடன் கூடிய உண்மை!

மூலிகைகள் முதல் வயாகராக்கள்வரை இன்று ஏராளமான மருந்துகள் வந்தாகிவிட்டது. ஆனால், கடையடைக்கும்போது கடைப் பையனிடம் போய், நள்ளிரவு டாக்டர் ஹஸ்கி குரலில் சொன்ன 'அந்தக் குதிரைப் படம் போட்ட மருந்து' எனக் கேட்டு வாங்குவது இன்னும் அதிகம் நடக்கும் ஒன்று. பல மருந்துக் கடைகளின் லாபக் கணக்கைத் தீர்மானிப்பதே இந்த வணிகம்தானாம்.

குறை ரத்த அழுத்தம் இருந்தாலோ, இதய தசைத் தளர்வு இருந்தாலோ, சரியான பரிந்துரைச்சீட்டு இல்லாமல் வாங்கப்படும் இந்த வேதி மருந்துகள் விபரீத விளைவைத் தரலாம். ஏதேனும் ஒரு துறை சார்ந்து பயின்று, அறத்துடன் பணியாற்றும் மருத்துவரை அணுகி, உரிய மருந்துகளைப் பெறுவது மட்டுமே சரியான வழி.

பூனைக்காலி விதை இச்சிக்கலில் சித்த மருத்துவம் காட்டும் மிக எளிய மருத்துவப் பயறு. 'வெல்வெட் பீன்ஸ்' **(Velvet beans)** என ஆப்பிரிக்கர்கள் அடிக்கடி உணவில் ருசிக்கும் இந்தப் பயறை, சித்த மருத்துவம் இனிப்பு நோயில் வரும் விரைப்புத்தன்மைக் குறைபாட்டுக்குப் பயன்படுத்துகிறது.

சாலாமிசிரி வேர், நெருஞ்சி முள், நீர்முள்ளி விதை, குறுந்தொட்டி வேர், களிப்பாக்கு, மராட்டி மொக்கு, சீமை அமுக்கரா கிழங்கு வேர் என இதற்குப் பயன்படும் மூலிகைகள் ஏராளம். எதை, யாருக்கு, எந்த அளவில், எப்படிச் சீராக்கிக் கொடுக்க வேண்டும் என்பதை சித்த மருத்துவர் அறிவர். அங்கு செல்லாமல், ஆன்லைனிலோ இருட்டில் உலாவும் கடையிலோ வாங்கி ஏமாறாமல், குடும்ப மருத்துவர் உதவியுடன் முறைப்படி பெறலாம்.

ஆரோக்கியமான தாம்பத்திய உறவு, நல வாழ்வின் அடித்தளம். அதைச் சிதைவுறாமல் வைத்திருப்பதற்கு இனிப்பைக் கட்டுப்பாட்டில் வைப்பது மிக முக்கியம். மருந்துகளைவிட நடைப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி, யோகாசனங்கள், முறையான உணவுக் கட்டுப்பாடு போன்றவை இந்தச் சிக்கலில் பயனளிப்பதைப் பல ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. முதுமையிலும் இனிமையாய்க் காதல் செய்ய, இனிப்பு நோயை வெல்வது மிக மிக அவசியம்.

**– டாக்டர் இராஜமாணிக்கம்**

# கும்பல் கொலைகளுக்குக் காரணம் வாட்ஸப் மட்டும்தானா?



இந்தியாவில் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 20க்கும் மேற்பட்டோர் கும்பல் கொலை செய்யப்பட்டதற்குக் காரணம் என்று 20 கோடி பேரிடம் இருக்கும் செல்போன் மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. வாட்ஸப்பில் பரவும் குழந்தை கடத்தல், கால்நடைத் திருட்டு வதந்திகளை நம்பும் விவரம் அறியாத கிராமப்புற மக்கள், சந்தேகப்படும் நபர்களைத் தாக்கிக் கொல்வதாகக் கூறப்படுகிறது. இந்த வதந்திகள் மறுக்கப்பட முடியாத உண்மைகளைப் போல பரவுவதுதான் இதில் வேதனை. விவரம் அறியாத மக்களின் தகவல் தொடர்புக் கருவி இப்படி வதந்திகளின் வாகனமாக இருப்பதற்குத் தொழில்நுட்பத்தை வழங்கும் நிறுவனங்கள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது. இது உண்மையான பிரச்சினையிலிருந்து கவனத்தை திசைதிருப்பும் குறுகிய வாதம். மக்களிடையே இந்த அளவுக்குப் பகைமை எண்ணம் ஊடுருவியிருப்பதற்கு அரசியல் தலைமையும் ஒரு காரணம் இல்லையா? சட்டம்ஒழுங்கை நிலைநாட்ட நாம் சீர்திருத்தம் மேற்கொள்ள வேண்டியது அவசியமா இல்லையா? இந்த சோக மரணங்களுக்கு, தகவல் அனுப்பும் சாதனமான வாட்ஸப் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரே சமயத்தில் ஏராளமானோரைச் சென்றடைவது வாட்ஸப். சமூகப் பதற்றத்தினால் ஏற்படும் கொலைகள்தான் கும்பல் கொலைகள் என்று ஏற்படுத்தப்படும் மாயையிலிருந்து விடுபட மூன்று உண்மைகளை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

முதலாவது அம்சம், கும்பல்களால் அடித்துக்கொல்லப்படும் சம்பவங்கள் தொடர்பாக தொகுக்கப்பட்ட தரவுகள் அரசிடம் இல்லை. மத்திய உள்துறை அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அளித்த தகவல்களின்படி, இதுவரை அப்படி ஏதும் தொகுக்கப்படவில்லை. தேசியக் குற்ற ஆவணக் காப்பகத்தின் மூலம் சேகரிக்கும் எண்ணமும் அரசுக்கு இதுவரை இல்லை. கும்பல்களின் கோபத்தால் விளையும் சம்பவங்களைக்கொண்டு எந்தவித முடிவுக்கும் வர முடியாது என்பதால் அரசு தொகுப்பதில்லையாம்.

இரண்டாவது அம்சம், இந்தியச் சட்டக் கட்டமைப்புகளின்படி, கும்பல்கள் சேர்ந்து ஒருவரை அடித்துக் கொல்வது குற்றச் செயல் என்ற வகைப்பாடும் இல்லை. மக்கள் சேர்ந்து அடித்துக் கொல்வதற்கு எதிராக தனிச் சட்டம் ஏதும் தேவையில்லை என்று இப்போதும் சிலர் வாதிடுகின்றனர். “ஒரு சமூகத்தின் மீது இன்னொரு சமூகம் ஆதிக்கம் செலுத்துவதற்காகத் திட்டமிட்டு நடத்தப்படும் அரசியல் படுகொலைகள்தான் இந்தக் கும்பல்களின் செயல்கள். இது ஒரு அடையாள



அரசியலும்கூட” என்று பால் பிராஸ் போன்ற அறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கும்பல்களின் கொலைகளைத் தடுக்க ‘மானவ் சுரக்ஷா கானூன்’ என்ற பெயரில் சட்டம் இயற்ற வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கடந்த ஆண்டு மே மாதம் முதலே கோரி வருகின்றனர். இக்கொலைகள் தடுக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் மக்களுக்கு இருந்தாலும், இத்தகைய சட்டம் அவசியமில்லை என்றே மத்திய அரசு கருதுகிறது.

அரசிடம் அதிகாரபூர்வமான தகவல்கள் இல்லாததாலும், கொலைகளைத் தடுக்க வலுவான சட்டம் இல்லாததாலும், காவல் துறையினரை மேற்கோள் காட்டி ஊடகங்கள் தரும் தகவல்கள்தான் மக்களிடையே பரவுகின்றன, கருத்துகளை உருவாக்குகின்றன.

மூன்றாவது அம்சம், உண்மைகள் புறக்கணிக்கப்பட்டு, சம்பவங்கள் எளிதாகச் சுருக்கப்பட்டு பொதுமைப்படுத்தப்பட்டுவிடுகின்றன. உடல் உறுப்புகளை எடுத்து வியாபாரம் செய்வதற்காகக் குழந்தைகளைக் கடத்துகின்றனர் என்று வாட்ஸப்பில் வெளியான தகவல்களால், சந்தேகப்படும் விதத்தில் நடமாடியவர்கள் மக்களால் மடக்கிக் கேள்விகள் கேட்கப்பட்டு, சரியான பதில்கள் பெறாததால் தாக்கப்பட்டதில் இறக்கின்றனர் என்று சம்பவம் முடிக்கப்படுகிறது. இச்சம்பவங்களில் சிக்கி அடிபட்டு இறப்பவர்கள் பெரும்பாலும் இடம்பெயரும் நாடோடி ஏழைகள் அல்லது மதச் சிறுபான்மையினர் என்ற உண்மை அடக்கி வாசிக்கப்படுகிறது. இச்சம்பவத்துக்கு முன்னால் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட பதற்றம், சமூக மூலதனம், செல்வாக்கு ஆகியவற்றில் மக்களின் வெவ்வேறு பிரிவினரிடையே நிலவும் அசமத்துவம், காவல் துறையின் திறமை ஆகியவை புறக்கணிக்கப்படுகின்றன. வாட்ஸப்பால்தான் படுகொலைகள் என்று தட்டிக் கழிக்கப்படுகிறது.

பசுப் பாதுகாப்புச் சட்டத்தால் ஊக்கம் பெற்றுப் பசு குண்டர்கள் தாக்குவதால், கும்பல்கள் அடித்துக் கொல்வதும் அதிகரித்துவருகிறது. 2015-2017 வரையில் நடந்த 24 சம்பவங்களில் 34 பேர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டு பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு ஆளாயினர். இதில் 94% சம்பவங்கள் பசு குண்டர்கள் போன்றவர்களால்



நிகழ்த்தப்பட்டவை. 91% பசு தொடர்பான தாக்குதல்கள். கும்பல் கொலைகளைத் தடுக்க சட்டம் இல்லை என்பதுடன் காவல் துறை சீர்திருத்தப் பரிந்துரைகள் அமலாகவில்லை என்பதும் இச்சம்பவங்களுக்குக் காரணங்களாக இருக்கின்றன.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது பிரச்சினைகளின் மூல வேரைக் கண்டறியாமல், வெகு சுலபமாக எதன் மீதோ பழிபோட்டுவிட்டு பொதுக்கொள்கை வகுப்புக்குத் தீமை செய்கிறோம் என்பது புலனாகிறது. நம்முடைய சட்டங்களிலும் காவல் துறையிலும் உள்ள பிரச்சினைகளை அலட்சியப்படுத்துகிறோம். செல்போனில் வாட்ஸப்பைப் பொருத்துவதைப் போலவே அரசின் கொள்கைகளையும் வெகு எளிதாக வகுக்கப் பார்க்கிறோம். பெரும்பாலான இந்தியர்களுக்குப் பாதுகாப்பு உணர்வையும், அந்தரங்கத் தன்மையையும், தகவல்களை அறியும் வாய்ப்பையும் அளிக்கும் வாட்ஸப்பையே வில்லனாகச் சித்தரித்து அதற்குத் தணிக்கையையும் கட்டுப்பாடுகளையும் விதித்து முடக்க முயற்சிக்கிறோம். அதே வேளையில் திட்டமிட்டுக் கும்பல் கொலைகளைச் செய்யும் சமூக விரோதிகளைத் தண்டனையிலிருந்து தப்புவிக்கிறோம். வாட்ஸப் மூலம் பரவும் தகவல்களை அது சரிபார்க்கக் கூடாது என்று நாம் சொல்லவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய ஜனநாயக அரசு செய்ய வேண்டிய கடமையை வாட்ஸப்பால் செய்ய முடியாது என்பதே இங்கு முக்கியம். சமூகத்தில் நிலவும் பதற்றங்களையும் சந்தேகங்களையும் போக்கி, வதந்திகளை நம்பக் கூடாது என்று மக்களைத் தயார்படுத்துவதும் அப்பாவிகள் கொல்லப்படுவதைத் தடுக்க வேண்டியதும் முழுக்க முழுக்க அரசின் கடமைதானே தவிர வாட்ஸப்புடையது அல்ல.

**– அருணாச்சலம்**

# அழிவுக்கு வழிவகுக்கும் புதிய நெடுஞ்சாலைத் திட்டங்கள்!

கன்னட நாவலாசிரியரான சிவராம கரந்த், மேற்குத் தொடர்ச்சி மலையின் இயற்கை வளம் அழியாமல் காக்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டு பணியாற்றினார். அந்த உணர்வை மக்களுக்குத் தொடர்ந்து ஊட்டிவருகிறார், சுற்றுச்சூழலியலாளர் மாதவ் காட்கில். மேற்குத் தொடர்ச்சி மலையின் இரு பகுதிகளிலும் தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்டவர் காட்கில். சாமானிய மக்களின் வாழ்வாதாரத்தையும், மலையின் சுற்றுச்சூழலையும் காப்பதை ஒரே நேரத்தில் மேற்கொண்டுவருகிறார். கட்டிடக்கலை, கலாச்சாரம் ஆகியவற்றில் கர்நாடகத்தின் இதர பகுதிகள் அதிக செல்வ வளம் கொண்டவையாக இருக்கலாம், மேற்குத் தொடர்ச்சி மலை மட்டுமே இயற்கை வளம் அதிகம் கொண்ட அற்புதமாகத் திகழ்கிறது. இந்த அழகும் வளமும் இன்னும் எத்தனை நாளைக்கு நீடித்திருக்கும் என்று சொல்ல முடியவில்லை.

கடந்த சில பத்தாண்டுகளில் இந்த மலைநாட்டின் மலைப்பாதை களும், அழகிய கடற்கரையோரமும் மனிதனின் கொடுங்கரங்களால் கொஞ்சம் கொஞ் சமாக சிதைக்கப்பட்டுவருவதைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

குன்றுகளும் காடுகளும் படிப்படியாக வெட்டப்பட்டு அடையாளமே இல்லாமல் மாற்றப்பட்டுவிட்டன. ஆறுகள் அசுத்தப்பட்டுவிட்டன. மண்ணில் நஞ்சு கலந்துவிட்டது அல்லது பெருமழைக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் கரைந்துவிட்டது. பெரிய நாசம் வருகிறது இவற்றையெல்லாம் விடப் பெரிய நாசம், வாசல் தேடி வந்துகொண்டிருக்கிறது. சித்ரதுர்கா என்ற ஊரிலிருந்து தர்மஸ்தலாவுக்கு நான்குவழி மாநில

நெடுஞ்சாலை அமைக்கப்படவிருக்கிறது. இந்தத் திட்டத்தால் சுமார் 50,000 மரங்கள் வெட்டிச் சாய்க்கப்படவுள்ளன. இவ்விரு நகரங்களை இணைக்க ஏற்கெனவே வேறு இரண்டு சாலைகள் இருக்கும் நிலையிலும் இந்த நான்குவழிப் பாதை திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இதுவல்லாமல் வேறு சில சாலைகளையும் அமைக்க உத்தேசித்துள்ளனர். தீர்த்தஹள்ளிமால்பே, சாகர் கொல்லூர், ஷிகாரிபுராபைண்டூர் ஆகியவை அந்த நெடுஞ்சாலைத் திட்டங்களாகும். இந்த நெடுஞ்சாலை கள் மேற்குத் தொடர்ச்சி மலையை வெவ்வேறு இடங்களில் பிளக்கும். காடுகளையும் புதர்களையும் அழிக்கும். மண் சரிவுகளை உருவாக்கும். மழை, வெள்ளத்தில் மண் வளம் மேலும் அரிக்கப்படும்.



மரங்களாலும் புதர் களாலும் இறுகப்பற்றிய நிலையில் உள்ள தரைப் பகுதி பெருமழையில் கரைந்து, நெகிழ்ந்த நிலையிலிருக்கும் போது மண் அரிமானம் அதிகரிக்கும். அதனால் மண் சரியும். கட்டிடங்களும் சாலைகளும் அப்படியே புதையும். சாலை அமைக்கும்போது புழுதி கிளம்பி சூழலை நச்சுப்படுத்தும்.

மனிதர்களும் சரக்குகளும் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குச் செல்ல சாலை வசதிகள் அவசியம்தான். கர்நாடக மாநிலத்துக்கே இயற்கை அரணாக அமைந்துள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் நாடி நரம்புகளை அறுத்தும், அதன் அடிவயிற்றைக் கிழித்தும் இப்படிக் குறுக்கும் நெடுக்குமாகச் சாலைகளை அமைப்பது அவசியம்தானா, இதற்கு மாற்றே இல்லையா என்று மக்கள் கேட்கின்றனர். இப்படிப் பல்வேறு ஊர்களை இணைக்கும் சாலைகளுக்குப் பதிலாக உள்நாட்டையும்

கடலோரத்தையும் இணைக்க, இதைவிடச் செலவு குறைவான, சூழலைப் பாதிக்காத ரயில் பாதைகளை அமைத்தால் என்ன? ஆபத்தான குடிநீர்த் திட்டங்கள் கர்நாடகத்தின் மிகப் பெரிய நகரமான பெங்களூருவுக்குக் குடிநீர் வழங்க, இயற்கையை மேலும் பாதிக்கக்கூடிய குடிநீர்த் திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளன. நேத்ராவதி ஆற்றின் தண்ணீரை பெங்களூருவுக்குத் திருப்பிவிட யெட்டினஹொளே திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலையில் பிரம்மாண்டமான குழாய்களைப் பதித்து அதன் மூலம் தண்ணீரை எடுத்துச்செல்வது இந்தத் திட்டம். குடிநீர்க் குழாய்கள், நீர்த்தேக்கத் தொட்டிகள், தண்ணீரை மேலேற்றும் பம்பு செட் இல்லங்கள், அலுவலகம், பணியாளர்களுக்கான குடியிருப்புகள் என்று லட்சக்கணக்கிலான மரங்களை வெட்டி இடம் தர முடிவுசெய்துள்ளனர். புதிதாக ஆட்சிக்கு வந்திருக்கும் காங்கிரஸ் மதச்சார்பற்ற ஜனதா தளக் கூட்டணி அரசு, அதைவிடப் பித்துக் குளித்தனமான திட்டம் ஒன்றை உத்தேசித்திருக்கிறது. இது இன்னொரு மேற்கத்திய ஆறான ஷராவதியி லிருந்து பெங்களூருவுக்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டமாகும். லிங்கனமக்கி நீர்த்தேக்கத்திலிருந்து 425 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் பெங்களூருவுக் குக் கொண்டுவரப்படவுள்ளது. இப்படிப்பட்ட மோசமான திட்டங்களால் மரம், செடி கொடி போன்ற தாவரங்களுக்கு மட்டுமல்லாமல் காடுகளில் வாழும் விலங்குகள், பறவைகள், பாலூட்டிகள், பூச்சியினங்கள் போன்றவற்றுக்கு ஏற்படக்கூடிய அழிவு அச்சமூட்டுவதாக இருக்கிறது. காடுகள் அழிவது மட்டுமல்ல, சமுதாயரீதியாக விவசாயத்தையும் வன நிலங்களையும் நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரங்களும் சீர்குலையும். எல்லா மக்களுக்கும் ஜீவாதாரமாக இருக் கும் நதிநீர் இப்படி நகர்ப்புறத் தேவைகளுக்காக மட்டுமே ஒதுக்கப்பட்டால், நாளடைவில் அந்த நகரங்களுக்கும் போதாமல் எல்லோரையும் அழிவுக்கு ஆளாக்கிவிடும். "நகரங்களைவிட அதிக எண்ணிக்கையில் மக்கள் வாழும் கிராமங்களின் குடிநீர்த் தேவைகளுக்கு ஏன் அதிக முக்கியத்துவம் தரப்படுவதில்லை? மாநிலத்தில் விவசாயத்தின் செழிப்புக்குக் காரணங்களாக இருந்த ஆயிரக்கணக்கான ஏரிகளை மீட்கவும், அவற்றில் மழை நீரையும் வெள்ள நீரையும் சேமிக்கவும் தீவிரமான முயற்சிகள் ஏன் எடுக்கப்படவில்லை?" என்று அரசைக் கேட்க வேண்டும் மக்கள். பாஜக, காங்கிரஸ், மதச்சார்பற்ற ஜனதா தளம் என்று எந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அரசியல்வாதிகள் எந்தத் திட்டங்கள் குறித்தும் உரிய துறைகளின் நிபுணர்களிடம் ஆலோசனை கேட்க மாட்டார்கள். இது அறியாமையால் அல்ல, உள்நோக்கத்தால்தான். அறிவியல் ஆலோசகர்களை நாடாமல், அதிகாரிகள் உதவியுடன் இப்படித் திட்டங்களைத் தீட்டினால்தான் தரகுத்தொகை மூலம் தங்களை வளப்படுத்திக்கொள்ள முடியும். சாலைகள், அணைகள், மின்உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றை உருவாக்கத் திட்டமிடுவது பெரும்பாலும் இந்த வகைகளில்தான். டெல்லியில் 17,000 மரங்களை வெட்டப்போவதாக வெளியான செய்தி குறித்து தேசிய ஊடகங்கள் மணிக் கணக்கில் விவாதித்தன. தேவையற்றதும் மடத்தனமான அந்தத் திட்டம், மத்திய அரசால் இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. கர்நாடகத்தில் இப்போது இவ்விரு திட்டங்கள் மூலம் 5 லட்சம் மரங்களுக்கும் மேல் வெட்டப்படவுள்ளன. தேசிய ஊடகங்கள் இதே அக்கறையை கர்நாடகம் மீது காட்டுமா? கர்நாடகம் என்னுடைய மாநிலம் என்பதற்காகக் கேட்கவில்லை. இமயமலையைப் போலவே நம்முடைய சுற்றுச்சூழல் தன்மைக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கியக் காரணமாக இருப்பவை மேற்குத் தொடர்ச்சி மலைகள் என்பதால் கேட்கிறேன்.

– A.C.குமார்

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் சிறப்பு பொதுக்குழு கூட்டம்






























*23.06.2018* அன்று சென்னை விருகம்பாக்கம், டால்ஃபின் பார்க் ஹொட்டலில் நடைபெற்ற "தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின்" *10*வது சிறப்பு பொதுக்குழு கூட்டம், மாநில பொது செயலாளர் முனைவர் ஆ.மவுரியன் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில அவைத்தலைவர் **S.**சரவணன், மாநில ஒருங்கிணைப்பாளர் **V.**அருணாசலம், மாநில செயலாளர் **K.**ராமசுப்ரமணியன், மாநில கௌரவ செயலாளர் **K.**ரமேஷ்குமார், மாநில பொருளாளர் **V.**சங்கர், மாநில துணை தலைவர் **A.C.**குமார், மாநில துணை செயலாளர்கள் **M.**தரணி, **V.**யுவராஜ், சங்கத்தின் சட்ட ஆலோசகர்கள் **M.**குணசீலன், **M.**சுதாகர் ஆகியோர் கலந்துகொண்டு மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கு நியமன சான்றிதழ் மற்றும் சிறந்த எழுத்தாளார்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டது. மேலும் மாநில பொது செயலாளர் முனைவர் ஆ.மவுரியன் எழுதிய "வில்லேஜ் ராஸ்கல்" மற்றும் "சர்கார் உத்யோகம்" நாவல் வெளியிடப்பட்டது.

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம்

**05.08.2018 அன்று சென்னை விருகம்பாக்கம்**
**டால்பின் பார்க் ஹோட்டலில் நடைபெற்ற**
**10வது சிறப்பு பொதுக்குழு கூட்டத்தில்**

**V.சங்கர்** ஆகிய என்னை

**மாநில பொருளாளராக தேர்ந்தெடுத்தமைக்கு**
**மாநில பொதுச் செயலாளர்**

முனைவர் **ஆ. மவுரியன்** அவர்களுக்கும்,

**மாநில, மாவட்ட**
**நிர்வாகிகளுக்கும்**
**மற்றும்**
**பொதுக்குழு**
**உறுப்பினர்களுக்கும்**



**நன்றி.. நன்றி.. நன்றி...**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்களின் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

**MAKKAL VISARANAI** Owned and Published by **A. Mouriyan**, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : **S.Ali Mohammad Syeed**, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor: **A. MOURIYAN**

Free Trial Free Trial Free Trial Free Trial Free Trial Free Trial

Hi-Tech

**Healing Your Life**

# CERAGEM




செராஜெம் தென்கொரிய நாட்டின் மிகச்சிறந்த இயற்கை மருத்துவ முறையாகும்.

1998 ஆம் ஆண்டு முதல் சுமார் 70 நாடுகளில் ஊசி, மருந்து, மாத்திரை மற்றும் பக்க விளைவு இல்லாமல் ஆரோக்கியமாக வாழ உதவி செய்து வருகிறது.

செராஜெம் இயற்கையான முறையில் நம் உடலில் ஆணி வேரான முதுகெலும்பில் கீழ்கண்ட செயல்பாட்டின் மூலம் மறுவாழ்வு அளிக்கிறது.

செராஜெம் பற்றிய கூடுதல் விவரங்களை எங்களின் மையத்திற்கு வந்து குணமடைந்தவர்கள் விவரங்களையும் ஒப்பு வாக்குமூலங்களையும் நேரில் வந்து தெரிந்து கொள்ளலாம். இது ஒரு ISO 9001-2000 தரச் சான்றிதழ் பெற்ற நிறுவனம்

## இதன் செயல்பாடுகள்

- இரத்த ஓட்டத்தை சீராக்குதல்
- இரத்தத்தை சுத்திகரித்தல்
- இரத்த உற்பத்தியை அதிகரித்தல்
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்துதல்
- மன அழுத்தத்தை போக்குதல்
- முதுகெலும்பை வரிசைப்படுத்துதல்

**மனிதன் உடலில் நோய் வரக் காரணங்கள்...**

1. முதுகு தண்டு வடத்தில் ஏற்படும் அழுத்தம் மாற்றம்
2. இரத்தம் அசுத்தமாக இருப்பது, உடலில் கழிவுகள் தேங்குவது
3. இரத்தம் சரியில்லாமல் இருப்பது.
4. உடல் உஷ்ணம் சீராக இல்லாதது
5. சக்தி ஓட்டம் இல்லாதது.

இந்த காரணங்களை சரி செய்யும் விதமாகவே செராஜெம் தெர்மல் அக்குபிரஷர் மசாஜரை, பல வருட ஆராய்ச்சிக்குப் பின்பு சூரிய ஒளியிலிருந்து வெளிப்படும் Far Infrared Rays-ஐ உள்ளடக்கிய Jade கற்களைக் கொண்டு தயாரித்துள்ளனர்.

இந்த மசாஜரில் Massage, Acupressure, Moxibushion, Chiopractic, Thermal Energy என 5 விதமான மாற்று முறை மருத்துவங்களும் உள்ளடங்கியுள்ளன.

இதில் தினமும் 40 நிமிடம் Theraphy எடுப்பதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் உண்டாகி, நோய்களைக் கட்டுப்படுத்தவும், நோய்கள் வராமல் தடுக்கவும் முடிகிறது.

உலகத்தில் முதன் முறையாக செராஜெம் இவ்வளவு பெருமை வாய்ந்த தெரபியை உலக மக்களுக்கு இலவசமாக அனுபவித்து பார்த்து முடிவு எடுக்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது.

**திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8.00 மணிமுதல் மாலை 5.20 மணிவரை**
**சனிக்கிழமை காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.20 மணிவரை**

MMK பில்டிங், நெ.3, ஆலப்பாக்கம் மெயின் ரோடு, (தேவி அகாடமி பள்ளி எதிரில்) வளசரவாக்கம், சென்னை - 600 087.

**Ph : 044 - 4854 3558, Cell : 91766 75494**

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்

- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything















No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com